திராவிடநாடு

25—10—59 | வார வெளியீடு | விலை 16 காசு

திராவிடமே!

—[தொல்காப்பியன்]—

முத்தமிழைப் பேசி முழுதாகத் தாளிருந்தப்
புத்தமுதே! இன்ப புரியே! திராவிடமே!

ஆரியத்தால் நான்குவகை ஆகித் தமிழகத்துப்
பராரிகளைப் போன்று நலிந்த திராவிடமே!

வாள்கட்டி நீபெற்ற வாழ்வோ, வடக்கரின்
தாள்கட்டித் தாழுதே! தேய்வதோ திராவிடமே!

தொட்டிலிலே தூங்குந் துடுக்கான பிள்ளைகளும்
கொட்டிவரும் போர்க்குக் குதிக்குந் திராவிடமே!

வாளெடுத்து வீசும் வரிப்புலியாம் உன்மக்கள்
தோளெடுத்து வீசாமல் தூங்குந் திராவிடமே!

வீரத்தால், நல்ல விவேகத்தால் வெற்றிபெற்றாய்!
சோரத்தால் பெற்றதுண்டோ சொல்வாய் திராவிடமே!

ஊர்மெச்ச வாழ்ந்தநீ ஊருக் கிளைத்தவனாய்
ஆர்மெச்ச வாழ்கிறாய்? ஐயோ! திராவிடமே!

வாழ்ந்தவர் வீழ்ந்தபின் வாழ மறுபடியும்
தாழ்ந்தவர் சொன்னால் தடையோ திராவிடமே!

ஒன்றுமட்டும் நான்சொல்வேன் உண்மை அழிவதில்லை!
தின்றுமட்டும் வாழாதே! தெற்கே! திராவிடமே!

வீழட்டுந் தங்குதடை! வெல்லட்டும் உன்மக்கள்!
வாழட்டும் உன்புகழ்! வாழ்வாய் திராவிடமே!

ஆம், அவரேதான்!

—(தமிழவேள்)—

மணி மூன்று ஆகிவிட்டதா? இன்னும் ஒரே மணி நேரந்தான்! அதற்குள் இரண்டில் ஒன்று முடிவு செய்துவிடவேண்டும்.

நான்கு மணிக்கு "அவர்" வரப்போகிறாராம்! அவரைப் பார்த்து நான் சம்மதம் தெரிவிக்க வேண்டுமாம். அவர் என்னைப்பார்த்துச் சம்மதம் தெரிவிக்க வேண்டியதில்லையாம்! அவருடைய பெற்றோர்க்குப் பிடித்திருந்தால் அவருக்குச் சம்மதந்தானாம்! நேற்று வந்து பார்த்துவிட்டுப் போன அவருடைய பெற்றோர்கள்தான் என்னை அவர்களுக்குப் பிடித்து இருக்கிறது என்று சொல்லிவிட்டார்களே!

என்ன மனிதரோ "அவர்"? பெற்றோர்க்கு அஞ்சி நடக்கும் பயங்காளியோ? அப்படி இருக்காதுபோல் தோன்றுகிறதே! நான்கு ஆண்டுகளாகத் திருமணமே வேண்டாம் என்று சொல்லி வந்தவர் இப்போதுதான் செய்துகொள்ள இசைந்தாராமே! பெற்றோரின் சொல்லை மீறாதவர் என்றால், நான்கு ஆண்டுகளுக்கு முன்பே அல்லவா திருமணம் செய்துகொண்டிருப்பார்? ஒருகால் ஏதுமறியாத பேர்வழியோ? இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னே பிறக்கவேண்டியவர். இந்த நூற்றாண்டிலே வந்து பிறந்துவிட்டாரே? அப்படியும் இருக்காதுபோல் இருக்கிறது. நான் அவரைப் பார்த்து மணக்கச் சம்மதித்தால்தான் மணந்துகொள்வாராமே! ஏதாவது குறையுடைய மனிதராக இருப்பாரோ? அப்படித்தான் இருக்கவேண்டும். இல்லையென்றால்—வீட்டுக்கு வருகின்ற பெண் எப்படிப்பட்டவள் என்பதைவிட, அவளோடு வருகின்ற பணம் எவ்வளவு என்பதையே பார்க்கின்ற இந்தக் காலத்தில் "நீங்கள் ஒன்றுமே செய்யவேண்டாம், நாங்களே எல்லாம் பார்த்துக்கொள்கிறோம்," என்று நேற்று வந்த அவருடைய பெற்றோர்கள் சொல்வார்களா? "அவர் ஏதோ குறையுடையவராகத்தான் இருக்க வேண்டும். என்ன குறையோ?

"என்ன குறையுடையவராக இருந்தாலும் சரி, பேசாமல் அவரை மணந்துகொள்ளச் சம்மதம் தெரிவித்துவிடு, நான்கைந்து ஆண்டுகளாக எத்தனையோ பேர் வந்து பார்த்துவிட்டுப் போனார்களே! யாராவது உன்னை மணக்க முன் வந்தார்களா? இல்லையே! உன்னோடு—பணமும் நகையும் — அவர்களுக்கு வேண்டிய அளவு வராது என்றல்லவா உன்னை மணக்காமல் போய்விட்டார்கள். குடும்பம் இருக்கிற நிலையில் பணமும் நகையும் உனக்கு எங்கே கிடைக்கப்போகிறது? இதுதான் நல்ல சமயம்! பணமும் நகையும் வேண்டாதவர்கள் வந்திருக்கிறார்கள். உனக்குத் திருமணம் ஆகிவிட்டால் அண்ணாவுக்கும் ஒரு சுமை குறையும்; அம்மாவுக்கும் ஒரு கவலை தீருமே!" என்கிறது ஒரு மனம். "வேண்டாம்! திருமணமே வேண்டாம் என்று சொல்லிவிடு. அண்ணா போன மாதம் சொல்லியபடி பள்ளியிலே சேர்ந்து ஓராண்டு படித்துப் பத்தாம் வகுப்பை முடித்துவிடு. பிறகு ஆசிரியப் பயிற்சி பெற்றுவிட்டால் உனக்கு என்ன குறை? அண்ணாவின் குடும்பத்துக்கும் நீ உதவியாக இருக்கலாமே" என்று சொல்லுகிறது இன்னொரு மனம். எந்த மனத்தின் பேச்சைக் கேட்பது என்று தெரியவில்லையே!

அப்பா இருந்திருந்தால் இந்தப் போராட்டத்திற்கே இடம் இருக்காது. குடும்பமும் இந்த நிலைக்கு வந்திருக்காது. எனக்கும் எப்போதோ திருமணம் ஆகிவிட்டிருக்கும், அதுவும் என் விருப்பப்படியே —என்னுடன் படித்துக்கொண்டிருந்த வேல்மணியையே மணந்திருப்பேன்! வேல்மணி!...இன்று அவர் எங்கே இருக்கிறாரோ? என்ன பணி ஆற்றுகிறாரோ? அவருக்கும் இன்னும் திருமணம் ஆகாமலே இருக்குமா? ஆகாமல் இருந்தால்...!

இருந்தால், என்னவாம்? அவர் நம்மை மணந்து கொள்வாரா? ஏனோ எப்படியோ அவர்தான் நம் நெஞ்சத்தே புகுந்துவிட்டார். நாமும் அப்படி அவர் நெஞ்சத்தே புகுந்து இருக்கவேண்டுமே! அப்படி இருந்தால் அவர் நம்மை மணந்துகொள்ள இந்த நான்கு ஆண்டுகளில் முயற்சித்திருக்க மாட்டாரா? நாம் திருச்சியிலேயே இருந்திருந்தால் முயற்சித்திருப்பார். நம்மை மணந்துகொண்டும் இருப்பார். அப்பா இறந்த ஆறு மாதத்திற்கெல்லாம்தான் நாம் அந்த ஊரைவிட்டு வந்துவிட்டோமே. நாம் சென்னைக்குப் போனது மட்டுந்தான் அவருக்குத் தெரிந்திருக்கும். சென்னையிலிருந்து மேலூர் வந்துவிட்டது அவருக்கு எப்படித் தெரிந்திருக்க முடியும்? தெரிந்தால் அவர் வந்திருப்பாரே! வந்து நம்மை மணந்துகொண்டும் போயிருப்பாரே!

நான் பள்ளியைவிட்டு நின்ற பிறகு நாளடைவில் எப்படியோ வேல்மணியை மறந்துதான் இருந்தேன். ஆனால் போன மாதம் அண்ணா சொன்ன அந்தச் சம்பவம், வேல்மணியை நான் மீண்டும் நினைக்கும்படி செய்துவிட்டதே! என்னையும் வைத்துக்கொண்டா, அண்ணா அந்தச் சம்பவத்தைச் சொல்லவேண்டும்?

அண்ணா இயல்பாக நல்லவர்தான். சூழ்நிலையால்தான் கெடு பவர், 'பணக்கார வீட்டுப் பிள்ளை நமக்கு என்ன குறை?'— என்று படிப்பிலே அக்கறை காட்டாமல் கெட்டவர்கள் சிலரோடு கூடித் திரிந்து, எட்டாம் வகுப்புக்குமேல் படிக்காமல் நின்றுவிட்டார். வியாபாரம் நடத்த எட்டாம் வகுப்

(4-ம் பக்கம் பார்க்க)

விடுதலை விழா!

18] ஆண்டுச் சந்தா ரூ. 8. (25—10—59) தனிப் பிரதி 16-காசு [இதழ் 15

"ஏன் மேயர் விடுதலை நாள் விழாவில் கலந்து கொள்ளவில்லை?" என்று கனம் சுப்பிரமணியனார் கேட்கிறார்! பேசாத கனம் காமராசர்கூட "தி. மு. க. வினர் இதற்குப்பதில் சொல்லவேண்டும்" என்று பேசுகிறார்! அவரது சீடர்களில் சிலர் கண்டனத் தீர்மானம் வேறு கொண்டுவந்திருக்கிறார்கள்! இது மாத்திரமல்லாமல் "மேயர் எங்கே ஓடி ஒளிந்துகொண்டார்" என்று கீழ்நிலையில் எழுதிக்காட்டலாயினர்!

ஏன் விடுதலை விழா என்று கேட்போமேயானால், உங்கள் மேயர் ஏன் கலந்துகொள்ளவில்லை என்று கேட்பவர்களாகத்தான் இருக்கிறார்கள்!

அவர்கள் கேள்வியில் ஏதாவது பொருள் இருக்கிறதா? சிந்தித்தாவது பேசுகிறார்களா? ஏதோ நாம் இவ்வளவு நாளும் "விடுதலை விழாவில்" பங்கேற்றுப் பணியாற்றியதுபோலும், வருடா வருடம் விழாக் கொண்டாடியது போலும் கருதிக்கொண்டல்லவா பேசுகிறார்கள்!

நாமோ தி. மு. க. வினர். வடநாட்டு ஆட்சியினின்றும் விடுபட்டு "மொழிவழி பிரிந்து இனவழி சேர்ந்து, திராவிடக் கூட்டாட்சியில் வாழ விரும்புபவர்கள்", இதையாரும் எளிதில் உணர்ந்துகொள்ள முடியும். இது இவர்களுக்குப் புரியாததுதான் விந்தையில் விந்தையாக இருக்கிறது.

"முன்பு தி. மு. க. வினர் வரவேற்றார்கள். இப்பொழுது ஏன் கொண்டாடக்கூடாது?" இப்படி மிகச் சாதாரணமாகவே கேட்கிறார் — சுப்பிரமணியம் அவர்கள்.

முன்பு நாம் வரவேற்றோம் உண்மைதான். "துக்க நாளா—மகிழ்ச்சி நாளா?" என்றால், மகிழ்ச்சி நாள்தான் என்றோம். எதிரிகளில் ஒருவன் எவ்வழியிலோ தொலைந்தான். எனவே துக்க நாளாகக் கருதுவானேன்? மகிழ்ச்சி நாள் எனக்கொண்டால் என்ன என நாம் கூறினோம். அதற்காக இவ்விழாவைக் கொண்டாடச் சொன்னோமா? என்றாகிலும் கொண்டாடியிருக்கிறோமா? எந்தப் பொருளில் பேசுகிறார்கள் என்பது புரியவில்லையே!

அதுமட்டுமல்ல, நாட்டுக்கு விடுதலை கிடைத்தால், இனி நலிவேதும் இராதென்றெண்ணி வரவேற்றோம் — **துக்க நாள் இது அல்ல** என்று துணிவும் தூய்மையும் கலந்த உள்ளத்தோடு, உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாமல், அந்நியன் ஒழிந்ததை அகமகிழ்ந்து வரவேற்றோம். அந்நியன் ஒழிந்தான் ஆனால் அயலவன் அந்த அந்நியன் இருந்த இடத்தில் அமர்ந்துகொண்டதுமன்றி, "அவனுக்கு நாம் ஒன்றும் சளைத்தவர்கள் அல்ல" என்ற முறையில் காரியங்களை நடாத்திச் செல்ல முற்பட்டால் விடுதலை விழாவா கொண்டாட முடியும்? சிந்தித்துப் பாருங்கள் தேசியத் தோழர்களே!

அல்லது மாநகராட்சி மன்றத்தைஆளும்பொறுப்பினைப் பெற்றிருக்கிறார்கள். உறுதி மொழி எடுத்துள்ளார்கள். எனவே கொண்டாடக் கடமைப்பட்டவர்கள் என்ற கருத்தில் இப்படிப் பேசுகிறார்களா?

கோயிலுக்குள் நுழைந்து அங்கிருக்கும் சிற்பக் கலைகளைக் காணவேண்டும் என்றால், சட்டையைக் கழற்று, திருநீறு பூசு, துண்டை இடுப்பில் கட்டு என்கிறான் பூசாரி! பார்க்கவேண்டும் என்ற விருப்பத்தில் சொன்னபடி நடந்து உள்ளே செல்கிறான் என்று வைத்துக்கொள்வோம்! உள்ளே சென்றவன்தான் கோயில் திருவிழா நடத்தவேண்டும் என்று கூறினால், அது எப்படி? அவன் உண்மைப் பக்தனாக இருந்தால்தானே சரிஎன்பான். விரும்பாதவன் எனக்கேன் இந்த வம்பு என்றுதானே கூறுவான்!

மாநகராட்சி மன்றத்தைக் கோயிலுக்கு ஒப்பிடலாம். அதற்குள் செல்வதற்குப் பல முறைகளை வகுத்துள்ளார்கள். முறைப்படி வெற்றிபெற்றிருக்கிறோம். நாம் அவர்களது விடுதலை விழாவில் பங்கேற்றுக் கொள்ளவேண்டும் என்றால் அது எப்படிச்சரியாகும்?

சரி! அதுதான் போகட்டும்! "விடுதலை நாள் கொண்டாடினால் உங்கள்கோரிக்கை கவனிக்கப்படும்" என்றாவதுகூறியிருக்கிறார்களா? விடுதலை விழாவைச் சிறக்கக் கொண்டாடுவோம் என்பதற்குண்டான மனப்பான்மையையாவது உருவாக்கித் தந்திருக்கிறார்களா?

அல்லது மக்களெல்லாம் நல்வாழ்வு வாழ்கிறார்கள்! ஏழை—பணக்காரன் என்ற நிலையில்லை! உயர்வும் இல்லை, தாழ்வும் இல்லை. தமிழ்மொழி நறுந் திலகமென மின்னுகிறது. மொழி ஏகாதிபத்தியம் இல்லை. தொழில்துறையில் ஓரவஞ்சனை இல்லை. நாமே எல்லாம் செய்யலாம்; எதுவும் செய்யலாம்! இருக்க விரும்பினால் இருக்கலாம், இல்லாவிட்டால் போய்விடலாம் என்று கூறத்தக்க விதத்திலாவது இருக்கிறதா? இல்லை! இல்லவே இல்லை!

உண்மை என்னவென்றால் "விடுதலைவிழாஏன்?" என்று நாம் கேட்கவேண்டிய கேள்வி அவர்கள் பக்கத்திலிருந்தே கிளம்புகிறது. இதுதான் ஆச்சரியம்! கனம் சுப்பிரமணியனாரும், காமராசரும் அவர் தம் தொண்டர்களும்தான் ஏதோ புனிதநாள் எனக் கருதிக்கொண்டு பேசுகிறார்களே தவிர, வடநாட்டு ஏடுகள் "ஏன் கொண்டாட வேண்டும்" என்றே கேட்கின்றன.

காரணம் என்ன தெரியுமா? பொதுமக்கள் இவ் விடுதலை விழாக் கொண்டாடுவதில் உற்சாகம் காட்டுவதில்லையாம் — புனிதநாள் கொண்டாட்டத்திற்குப் போவதே கிடையாதாம்! எனவேதான் ஏன் இந்த விழா என்று கேட்கின்றன அந்த ஏடுகள்?

"ஈஸ்டர்ன் எக்கனமிஸ்ட்" என்ற ஒரு ஏடு டெல்லியிலிருந்து வரும் வார வெளியீடாகும்! இது காங்கிரசைப் பாதுகாக்கும் தூண்களில் ஒன்று. பணம் படைத்தவரால் நடத்தப்படும் ஏடாகும்! இந்த ஏடு தனது 21—8—1959-ந்தேதிய தலையங்கத்தில் விடுதலை விழாபற்றிச் சொல்லி அழுவதைப் பாருங்கள்:-

"1959-வருட விடுதலை நாளன்று "டெல்லி"யில் இருப்பவர்கள், அது ஒவ்வொரு வருடமும் மாறுபட்டு வருவதைக் கவனிக்காமலிருந்திருக்க முடியாது. மாறுபாட்டுக்கான காரணகாரியங்களை ஒப்புக்கொள்ளாவிட்டாலும், இந்த உண்மையை மறைக்க முடியாது. 'செங்கோட்டையில்' கொடியேற்று நிகழ்ச்சி நடைபெற்றபோது முன்னை விடக் குறைந்த அளவு மக்கள் கூடியிருந்தது முற்றிலும் உண்மையாகும். பரந்த இடம் காலியாகக்கிடந்தது. நாடெங்கும் நடந்த கொடியேற்று விழாவிற்குக் கூட்டமே இல்லை. இப்புனித விழாக்கொண்டாடும் உற்சாகமே மக்களிடம் இல்லை."

விடுதலை விழாவில் ஏன் பங்கேற்றுக்கொள்ளவில்லை என்று கேட்கிறார் சுப்பிரமணியம்—நமது மேயரைப்பார்த்து. அதோ "ஈஸ்டர்ன் எக்கனமிஸ்டு" என்ற வடநாட்டு ஏடு கேட்கிறது, "அஃது இருக்கட்டும், முதலில் மக்கள் எங்கே? உற்சாகம் எங்கே? புனிதவிழாவிற்குக் கூட்டம் இல்லையே, ஏன்?" என்று! இதற்கு கனம் காமராசர் என்ன பதில் சொல்லுவார்.

மக்களுக்கு நம்பிக்கையில்லை! எனவே உற்சாகமில்லை! இதுதான் கூட்டமாகக் கூடாததற்குக்காரணம்! தி. மு. க-விற்கு வடநாட்டு ஆட்சிமீது நம்பிக்கையில்லை. எனவே விழாவில் மேயர் கலந்துகொள்ளவில்லை. இதில் என்ன தப்பு இருக்கிறது?

மக்களுக்கு விருப்பமில்லை. இது வெட்டவெளிச்சமாகத் தெரிகிறது. பின்னர் வீணாக விடுதலை நாள் என்று ஆகஸ்ட் 15-ந்தேதியை ஏன் கொண்டாடவேண்டும்? "ஒழித்துவிடலமே" என்கிறது 'டெல்லியிலே'யிருந்து வருகிற 'காரவான்" ஏடு தனது "செப்டம்பர்" இதழ் தலையங்கத்தின்மூலம்.

"ஒவ்வொரு வருடமும் ஆகஸ்ட் 15ந் தேதி விடுதலை நாள் கொண்டாடுவது விரைவாகக் குறைந்து வருகிறது. இது விடுதலைக்காக நாம் செய்த தியாகத்தை வேதனையோடு எண்ணிப் பார்க்கச் சொல்லுகிறது. எனவே இவ்விழாவை ஒழித்துவிட்டு குடியரசு தினத்தைச் சிறப்பாகவும், எடுப்பாகவும் கொண்டாடுவதில் கவனம் செலுத்துவது நல்லது."

வேகமாக, விடுதலைபெற்ற உணர்ச்சி குறைகிறது என்பதைக் காட்ட "Progressively declining"— என்ற ஆங்கில வார்த்தையை உபயோகித்திருக்கிறது "காரவான்". மக்கள் எண்ணம் இவ்வாறு போய்க்கொண்டிருக்கும்போது "மேயர்" மாத்திரம் கலந்துகொள்ளாதது தப்பிலித்தனமாம்! அந்தோ! பரிதாபம்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

வரை படித்ததே போதும் என்று அப்பாவும் அவரை வியாபாரத்திலே இழுத்துப்போட்டார். திருமணத்தைச் செய்துவைத்தார். திருமணமாகி இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையானதும், அண்ணாவும் குடும்பத்திலே கொஞ்சம் அக்கரைகொள்ளத் தலைப்பட்டார். ஆனால், திடீரென அப்பா இறக்கவும், அப்பாவுடன் வியாபாரத்திலே கூட்டாளியாக இருந்தவர் அண்ணாவை ஏமாற்றிவிட வேண்டுமா?

என் படிப்பு ஒன்பதாம் வகுப்போடு நின்றது. அண்ணாவின் விருப்பப்படி, இருந்த வீட்டை விற்றுப், பணத்தை எடுத்துக்கொண்டு சென்னை சென்றோம். அண்ணா புதிதாக ஒரு வியாபாரத்தைத் தொடங்கினார். மீண்டும் குடும்பம் பழையநிலை எய்தும் என்றுதான் எல்லோரும் எதிர்பார்த்தோம். ஆனால், வியாபாரத்திலே பெருத்த நஷ்டம் ஏற்பட்டு, முதலுக்கே மோசமாகி விட்டதே!

பிறகுதான் அண்ணா வேலை தேடி அலைந்தார். சென்னையை விட்டு மேலூர் வந்தோம். அண்ணாவுக்கும் இந்தப் பஸ் கண்டக்டர் வேலை கிடைத்தது. அதன் மூலம் பெறுகின்ற வருவாயில்தான் இன்று குடும்பம் எப்படியோ நடக்கிறது.

அண்ணாவுக்கோ இப்போது நான்கு குழந்தைகள், அண்ணி, அம்மா, நான் ஆகிய மூவரோடு குழந்தைகளையும் சேர்த்தால் ஏழு பேர். அண்ணாவின் அந்தச் சிறிய வருவாயை எதிர்பார்த்து நிற்கிறோம். அந்த வருவாயில் — அண்ணாவையும் சேர்த்துக்கொண்டால், எட்டு வயிறுகள் பசியாறவேண்டும். எட்டு உயிர்கள் உடுக்க உடை, இருக்கும் இடத்திற்கு வாடகை, எல்லாம் அதில்தான் ஆகவேண்டும். அதோடு இருந்தாலும் பரவாயில்லையே! எனக்குத் திருமணம் செய்து வைக்கின்ற பொறுப்பும் அண்ணாவின் தலையிலே அல்லவா விழுந்திருக்கிறது? அதனால்தானே அந்தத் தவறான வழிக்குச் சென்றார். நல்லகாலமாக யாரோ ஒருவர் அண்ணாவை அந்தத் தவறான வழியினின்றும் மீட்டுவிட்டார்.

"இத்தனை நாளும் நான் ஒரு பெருங்குற்றத்தைச் செய்து வந்தேன். இன்று நிகழ்ந்த ஒரு சம்பவம், என்னை இனி, அந்தக் குற்றம் செய்யாதபடி திருத்திவிட்டது."— என்று அண்ணா அன்று இரவு அம்மாவிடம், என்னையும் அண்ணியையும் வைத்துக்கொண்டேசொல்லத்தொடங்கியபோது, என்னவோ என்று ஆவலோடு கேட்டேன். அண்ணா தொடர்ந்தார். "தென்னமரத் தெரு பஸ் நிறுத்தத்தில் ஒரு இளைஞர் வந்து பஸ் ஏறினார். என்னிடம் இரண்டு ரூபாய் நோட்டு ஒன்றைக்கொடுத்துக் காட்பாடிக்கு ஒரு டிக்கட் கேட்டார். 'தருகிறேன்' என்று நான் அவரிடம் சொல்லிவிட்டு ரூபாயை வாங்கிப் பையில் போட்டுக்கொண்டேன். பஸ் காட்பாடியை நெருங்கிக்கொண்டிருந்தது. அதுவரையில் அவருக்கு நான் டிக்கட் தரவில்லை. சில்லறை

(15-ம் பக்கம் பார்க்க)

பதினான்கு அடுக்கு மாளிகை பேசினால்...!

திராவிடத் தோழர்காள்!

என்னெஞ்சம் வேகிறது! வேதனை கரைபுரண்டோடுகிறது! ஆற்றுவார் இல்லை! தேற்றுவார் இல்லை! நானே நொந்துகொள்ளுகிறேன்! நினைத்து, நினைத்து ஏங்குகிறேன்! என் செய்வேன்? எங்கு போவேன்? யாரிடம் சொல்லி அழுவேன்? அக்கிரமத்தை — அநியாயத்தைத் தட்டிக்கேட்க ஆளில்லை! எனவே நானே கவலைப்படுகிறேன் — வேதனைப்படுகிறேன். கண்ணீர் தாரை தாரையாக வடிகிறது! ஆமாம் வேதனையின் விளைவு! எரியப் போகும் எரிமலையென என் உள்ளம் அனலாகிறது!...

என்னப்பா திடீரென்று இப்படிப் பேசஆரம்பித்துவிட்டாய்? கொதிக்கிறது, வேகிறது என்று கூப்பாடு போடுகிறாயே! காரணம் என்ன? கண்ணீர் வடிக்கிறாயே! விபரம் என்ன?

அடேயப்பா...! எனக்கு இருக்கும் மதிப்புத்தான் என்ன? ஒன்றா, இரண்டா? பதினான்கு அடுக்கு மாளிகை, ஒன்றின்மேல் ஒன்றாகப் பதினான்குஅடுக்குகள்! பார்ப்போர் எல்லாரும் புகழ்கிறார்கள்! அவ்வழி செல்வோர் எவ்வளவு அவசரமானாலும் என்னை அண்ணாந்து பார்க்காது செல்லார்!

'இந்தி'யாவிற்கே நீ ஒரு "சொத்து" என்றல்லவா நாட்டுத் தலைவர்கள் பேசுகிறார்கள்! "இந்தியா'வின் புகழுக்கு நீயமல்லவோ ஒரு சாட்சி! பணத்தைத் தண்ணீரைக் கொட்டுவதுபோலல்லவா கொட்டினார்கள்! இலட்சம் இலட்சமாகவல்லவா புரண்டது பணம்!

நீயிருக்கும் எழிலைப் பார்த்ததும் 'எழில் காவியம்' இயற்றச்சொல்லுகிறது! உனது எழில் — அழகு உன்னோடு நின்றுவிட்டாலாவது பரவாயில்லை! சென்னைமா நகரெங்கும்—ஏன் இந்தியாவெங்குமன்றோ உன் அழகு மின்னுகிறது! ஏ! அப்பப்பா... உனக்கிருக்கும் பேரென்ன... புகழென்ன!

★

அமெரிக்காவிலும், பிரிட்டனிலும்தான் இப்படிப்பட்ட கட்டிடங்களைக் காணமுடியும் என்றிருந்த மக்களுக்கு இல்லை இல்லை! இங்கும் —சென்னையிலும் காணலாம் என்றல்லவா சொல்லிக்கொண்டிருக்கிறாய்! உன் மாட்சி கண்டு மகிழாதார் யாரே! கட்டிடக்கலை விற்பன்னர்கள் களிபேருவகை கொள்கின்றனர். நாட்டுத் தலைவர்கள் வாயார வாழ்த்துகிறார்கள்! ஏடுகளெல்லாம் உனது வரலாறுபற்றித் தனி வெளியீடு வெளியிட்டுப் பெருமைப்படுத்துகிறார்கள்!

ச. வெ. பாண்டியன்

சென்னை மந்திரியல்ல — மத்திய மந்திரியால் திறந்துவைக்கும் "பேறு" பெற்றுள்ளாய்! இத்தனை இத்தனை வாய்ப்புகள் இருந்தும் நீ கண்ணீர் வடிப்பதும், வேதனை நெஞ்சுடன் விம்முவதும் ஏன்தான் என்பது விளங்கவில்லையே! ஏன் வந்துற்றதோ உனக்கிந்தக் கேடு!" என்று நீங்களெல்லாம் நினைக்கலாம்—கேட்கலாம்!

கேட்கவும் வேண்டும்! அப்படியானால் தானே எனது சோகக் கதையை உங்களுக்குக்கூறி எனது பாரத்தை ஒருவாறு தணித்துக் கொள்ளமுடியும்?

நாடும், ஏடும் போற்றிப் புகழ்வது உண்மைதான்! எங்கும் என்னைப் பற்றியே பேச்சு நடைபெறுகிறது என்பதும் உண்மைதான. பக்கத்து நாடுகளிலெல்லாம் என்னைப்பற்றிப் "பொறாமை" வளர்ந்து வருவதும் இல்லை என்பதற்கில்லை! 'இந்தியா'விலேயே பெரிய கட்டிடம் இதுதான்! 'பம்பாயில்' இருக்கும் கட்டிடம் பதின்மூன்று அடுக்கு மாளிகை! இதுவோ பதினான்கு அடுக்கு மாளிகை என்ற பேச்சும் எனது காதுகளில் விழத்தான் செய்கிறது! 'ஆசியாவிலேயே பெரிது' என்பதும் பெருமையாகத் தான் இருக்கிறது.

ஆனாலும் வேதனை முட்டுகிறது! காரணம், என்னால் எந்த நாட்டுக்குப் புகழ் கிடைக்கவேண்டுமோ, அந்த நாட்டிற்குக் கிடைக்கவில்லை! என்னால் பெயரும்,புகழும் இந்தியாவிற்குத்தானே தவிர, திராவிடத்திற்கல்ல! ஆமாம்! நான் பிறந்த 'திராவிடத்திற்'கில்லாத புகழ் இந்த 'பாரதத்திற்கா' கிடைக்க வேண்டும்! நான் பிறந்துதான் பலன் என்ன?

அவள் அழகான பெண்தான் என்கிறீர்கள், சரி! கண் காந்தம் போல் இழுக்கிறது; முகம் சந்திர பிம்பம்; கதுப்புக் கன்னங்கள்...... அப்பப்பா என்ன அழகு! என்ன அழகு என்று புகழ்ந்து பேசுகிறீர்கள், சரி! ஆனால் அந்த அழகு நங்கையை இருக்கவேண்டியவரிடமிருந்து பிரித்து ஒரு வேண்டாத அந்நியனுடன் வாழும்படி செய்தால் அவள் அழமாட்டாளா? வேதனையுறமாட்டாளா? இது போல்தான் என் நிலையும்!

'திராவிடத்தின்' புகழ்மிக்க கட்டிடம் என்று பேசுவார் இல்லை. 'இந்தியாவைச்' சேர்ந்த 'சென்னையிலி'ருக்கும் மாளிகை என்று தானே அழைக்கப்படுகிறேன. எனது தன்மானம பறிபோய்விட்டதே! நான் வடநாட்டுக்கன்றோ புகழ்பெற ஏதுவாக இருக்கிறேன்! அந்தோ! — வடக்கு! அதன் கையில் நான் இருப்பதா? அதனிடம் நான் சேர்ப்பிக்கப்படுவதா? ஐயோ நினைக்கவே நெஞ்சு கூசுகிறது! வடநாட்டு மந்திரி திறந்து வைத்த 'பேறு' பெற்றேன் என்று வேறு பேசுகிறீர்கள்! இது ஒரு பெரிய கேவலம்! தமிழக மந்திரிகள் யாராவது திறந்துவைத்திருந்தாலாவது தற்காலிக மகிழ்ச்சி கொண்டிருப்பேன்!

இக்கட்டிடம் முதன்முதலில் ஒரு தமிழ் முதலாளியால் கட்டப்

பட்டது. பின்னர்தான் வடக்கு, தன் வசபப்படுத்திக்கொண்டுவிட்டது! இதை நினைக்கும்போது 'திராவிடத்தின்' பண்டைய நிலை என் கண்முன் நிற்கிறது!

பண்டு உலகெங்கும் அழகு செய்த "திராவிடம்" இப்படித்தானே வடவர்களால் தந்திரமாகப் பிடிங்கப்பட்டு இன்றுபின்னமாக்கப்பட்டது!

இதுபோகட்டும்! நான் எந்த ஒரு அமைப்பைச் சார்ந்திருக்கிறேனே, அதில் தென்னகத்திற்கெதிராகக் கத்திதீட்டப்படுவதை நான் காணும்போது என் உள்ளம் என்ன பாடுபடும்? சற்றே சிந்தித்துப் பாருங்கள்!

நான் 'ஆயுள் பாதுகாப்புக் கழக' (லைப் இன்சூரன்சு கார்ப்பரேசன்) அமைப்பைச் சேர்ந்தவன் என்பது உங்களுக்குத்தான் தெரியுமே! இந்த அமைப்பு வடவரால் கைக்கொள்ளப்பட்டதினால்தான் நான் வடநாட்டாருக்கு அடிமையாக வேண்டிய நிலையும் ஏற்பட்டுவிட்டது. "பாரதமெங்கும்" உள்ள உழைப்பாளர்களால் கொடுக்கப்படும் பணத்தைச் சேர்த்து வட்டியுடன் திருப்பிக்கொடுப்பதே இந்த அமைப்பின் பணியாகும்!

கொடுத்த பணத்திற்கு வட்டி எப்படிக் கொடுப்பது? அதற்காக இந்தப் பணத்தைபபெரியதொழிற்சாலைகளில்முதலீடுசெய்துஇலாபம் சம்பாதிக்கிறார்கள். அதிலிருந்துதான் வட்டி செலுத்தப்படுகிறது. இதனால் தொழிற்சாலை பெருக வாய்ப்பும், அதோடு நாடு வாழ வழியும் கிடைக்கிறது!

இப்படிக் கிடைக்கும் பணத்தை எங்கெங்கு, எந்தத் தொழிலில் முதலீடுசெய்வது என்பதைப்பற்றி முடிவுசெய்ய "பம்பாயில்" "முதலீட்டுக்குழு" [இன்வெஸ்ட் மெனட் கார்ப்பரேசன்] நிறுவப்பட்டிருக்கிறது. இங்குதான் "தென்னகத்திற்கு" மொட்டையடிக்கும் வேலை நடக்கிறது!

ஏகபாரதம் என்று பேசுகிறார்கள்! நாமெல்லாம் ஒரு தாய்வயிற்றுப் பிள்ளைகளல்லவா என்றுவேறு பேசுகிறார்கள்! இபபடிப் பேசுகிறவர்கள்தான் தொழில் துறையில் தேய்ந்திருக்கிற "திராவிடம்" நமது பாரதத்தின் ஒரு பகுதிதானே என்று கருதாமல், மேலும் பட்டைநாமம் தீட்டுகிறார்கள்! இது என் அமைப்பிலே நடைபெறுகிறது!

"ஆயுள் பாதுகாப்புக் கழகத்திற்கு" வந்துசேரும் பணத்தில் தென்பகுதியிலிருந்துதான் அதிகம் பணம் வருகிறது. இந்த உண்மையை, கழகத் தலைவர் பி. ஏ. கோபால கிருஷ்ணன் அவர்களின் நிர்வாக அறிக்கையிலிருந்தே தெரிந்துகொள்ளலாம்!

"ஆயுள் பாதுகாப்புக் கழகம்" இந்தியாவை ஐந்து வட்டங்களாகப் பிரித்துக்கொண்டு தொழில் நடத்துகிறது. இதில் 1956, 1957 ஆகிய இரண்டு வருடங்களில் மட்டும், தென் வட்டத்திலிருந்து 87-கோடியே 48-இட்சம் ரூபாய் வருமானம் வந்துள்ளது. 'தென்னகத்திலும்' 'தமிழகத்'திலிருந்துதான் அதிக வருமானம் கிடைத்துள்ளது. தமிழகம் மட்டும் வழங்கியுள்ள ரூபாய் 36-கோடியே 88-இலட்சம்.

இப்படிக் கிடைக்கும் பணத்தைத்தான் "முதலீட்டுக் குழு" பல தொழில்களில் முதலீடு செய்கிறது. அதிக வருமானம் கிடைக்கும் வட்டத்தில்தான் அதிக முதலீடு செய்யவேண்டும். இதுதான் நேர்மை! அதுவும் பின்தங்கியுள்ள "திராவிடத்திற்கு" இது தவிர்க்க முடியாததும்கூட. ஆனால் இதற்கு மாறாக "ஆயுள் பாதுகாப்புக் கழகம்" நடந்து வருகிறது.

"இந்தியா" முழுதும் 1956, 1957 ஆகிய ஆண்டுகளில் "ஆயுட்பாதுகாப்புக் கழகம்" மொத்தம் 69-கோடியே 14-இலட்சம் ரூபாய்களை முதலீடு செய்துள்ளது. இதில் "பம்பாய்" மாநிலத்தில் மட்டும் 25-கோடியே 87-இலட்ச ரூபாயும், வங்காளத்தில் 23-கோடியே 17-இலட்ச ரூபாயும், பீகாரில் 7-கோடியே 2-இலட்ச ரூபாயும் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இந்த மூன்று வடநாட்டு மாநிலங்களிலும் முதலீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை ரூ. 56-கோடியே 6-இலட்சம்.

தமிழ் நாட்டில் மாத்திரம் 2 கோடியே 44 லட்சம் ரூபாய்தான் முதலீடு செய்து இருக்கிறார்கள். 'தமிழகத்'திலிருந்து சென்ற பணம் மாத்திரம் ரூ. 36 கோடியே 88 இலட்சம். கிடைத்திருப்பதோ 2 கோடியே 44 இலட்சம் ரூபாய்! ஆந்திராவில் 1 கோடியே 52 இலட்சம் ரூபாய். மைசூரில் 99 இலட்சத்து 28 ஆயிரம் ரூபாய். கேரளத்திய 98 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய். தென் மாநிலங்களில் மொத்த முதலீட்டுத் தொகை ரூ. 5 கோடியே 94 இலட்சம்.

"இந்தியா" முழுவதிலும் முதலீடு ரூ. 69 கோடியே 13 இலட்சம்!

வடபகுதியில் மூன்று மாநிலங்களில் மட்டும் முதலீடு செய்துள்ள தொகை ரூ. 56 கோடியே 6 இலட்சம்!

"திராவிடப் பகுதி" நான்கிலும் மொத்த முதலீடு ரூ. 5 கோடியே 94 இலட்சம்! இதில் "தமிழகம்" மாத்திரம் பெறுவது ரூ. 2 கோடியே 44 இலட்சம்!

இந்த ஓரவஞ்சனைபற்றி நீங்களே சிந்தித்துப் பாருங்கள்! இந்த அநியாயம் கண்டு உங்கள் குருதி சூடேறவில்லையா? வேதனை நெஞ்சைப் பிளக்கவில்லையா? பின் நான மாத்திரம் எப்படிச் சும்மா இருக்க முடியும்! வேதனையால் நெஞ்சம் புண்ணாகிறது! கண்ணீர் ஆறுக ஓடுகிறது!

இந்த வஞ்சகர்களிடம் சிக்கிக்கொண்டால் நாம் எப்படி வாழ்வு பெறமுடியும்? வாழ்விழந்த திராவிடம் மீண்டும் வாழ்வு பெறுவது எப்போது? இருண்ட தென்னகத்தில் எழுஞாயிற்றின் ஒளி படுவது எந்நாள்?

நோகும் எனது நெஞ்சம் இதைத்தான் கேட்கிறது! யார் பதில் தர இருக்கிறார்கள்! கேட்டாலோ "பேரு பெரிய பேரு" என்றுதான் பேசுகிறீர்கள்! இந்தப் பெயரும் எனக்குத் தேவைதானா? இதுவும் ஒரு வாழ்வா? வடநாட்டோடு வல்லடித்தனமாக இணைக்கப்பட்டிருக்கிறேன். இதுமாத்திரமல்லாமல் "திராவிடத்தை"த் தேய்க்கும் திட்டம் தீட்டப்படுதலையும் காண்கிறேன். எனவேதான் நெஞ்சுபற்றி எரிகிறது!

திராவிடத் தோழர்களே! தாய்மார்களே! உங்களுக்கு ஒன்று மாத்திரம் சொல்லிக் கொள்வேன்! வடக்கு நம்மை வஞ்சிக்கிறது; நான் எவ்வளவு அழகும்—பொலிவும்,—பெருமையும் — உடையவள் என்பது உண்மையோ, அந்த அளவு என் வேதனையும் உண்மை என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே வீணரை விரட்ட — வஞ்சகர்களை வாட்ட— "திராவிடம் தனியாக மலர-இன்றே வீறுகொண்டெழுங்கள்! எழுச்சிப் பண்பாடுங்கள்! தூள் தூளாகட்டும் வடநாட்டுத் துரோகம்.

இப்படிக்கு,

பதினான்கு அடுக்கு மாளிகை.

கலிப்படம்

"தேனீ"

காதலுக்குத் தடை!

மாணவ — மாணவிகள், எக்காரணத்தைக்கொண்டும் கல்லூரிக் கட்டிடத்துக்குள் சந்தித்துப் பேசக்கூடாது, என்று கராச்சியிலுள்ள ஒரு கல்லூரியின் நிர்வாகத்தினர் கடுமையான உத்தரவு பிறப்பித்திருக்கின்றனராம்!

அந்த உத்தரவை மீறுபவர்களுக்கு முதல்தடவை ரூ. 5 அபராதம் விதிக்கப்படுமாம்! பின்னர் தொடர்ந்து மீறப்பட்டால் தண்டனை கடுமையாகுமாம்!

இப்படிப்பட்ட தடை விதிக்கப்பட்டதற்கான காரணம், கல்லூரி நிர்வாகஸ்தர்கள், 'காதல்' தவிர்க்கப்பட வேண்டும் என்று கருதுகிருர்களாம்!

*

ஐயோ, தலைவரே!

ஜோத்பூர் நகரசபைத் தலைவருக்கு 6-மாதம் சிறைத் தண்டனையும், ரூ. 101 அபராதமும் விதிக்கப்பட்டிருக்கிறது!

அவர் செய்ததாகக் கூறப்படுகிற குற்றமோ, மிகவும் விசித்திரமானது!

அந்த நகரசபை உறுப்பினர் ஒருவர், ஏதோ காரணத்தால், நகரசபைத் தலைவரைப்பற்றிப் போலீசில் புகார் செய்தாராம்!

இதைக்கண்டு, ஆத்திரமடைந்த நகரசபைத் தலைவர், அந்த உறுப்பினரின் மூக்கைக் கடித்துக் காயப்படுத்திவிட்டாராம்!

*

மானம் பெரிது.

தன்னுடைய கற்பைக் காப்பாற்றிக்கொள்ளும்பொருட்டு, பெண் கொலைசெய்தாலும் தவறில்லை, என்கிருர் ரோடோண்டி என்னும் பாதிரியார்!

ஆல்பா பிருகி என்றெரு பெண்—பத்தொன்பது வயதினள். அவளைப் பலவந்தப்படுத்திக் கற்பழிக்க முயன்றனராம், ஐந்து இளைஞர்கள்!

அந்த ஐவரில் ஒருவனை, பிருகி கத்தியால் குத்திவிட்டாளாம்—மற்றவர்களெல்லாம் தப்பி ஓடிவிட்டனராம்!

இத்தாலியிலே நடைபெற்ற சம்பவம் இது. அந்த நாட்டு நீதி மன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகிறது!

அந்த நாட்டு மக்களிலே பெரும்பாலோர், அந்தப் பெண்மணி கொலைசெய்தது குற்றமில்லை என்று கருதுகின்றனராம்! மாறுபட்ட கருத்துக்கொண்டிருப்போரும் பலர் உள்ளனராம்!

இந்தச் சூழ்நிலையில், ரோடோண்டி பாதிரியாரின் கருத்து ஒரு புதுத் திருப்பத்தை உண்டாக்கியிருக்கிறதாம்!

*

தேசாயும் –சோதிடமும்!

காமன் வெல்த் நிதியமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொண்டு, சுற்றுப்பயணம் செய்துகொண்டிருக்கும் மொரார்ஜி தேசாய், ஐரோப்பா முழுவதிலும் இரயிலிலேயே சுற்றுப் பயணம் செய்கிருர்!

ஆகாய விமானத்தில் செல்லாமல் இரயிலிலே பிரயாணம் செய்கிருரே, இவரல்லவா சிக்கனவாதி, நல்ல நிதியமைச்சர், என்று யாரும் அவசரப்பட்டுப் 'புகழ்மாரி' பொழிந்துவிடத் தேவையில்லை!

அவர் இரயில் பிரயணத்தை என் மேற்கொண்டிருக்கிருர் தெரியுமோ?

ஆகாய விமானத்தில் சென்ருல், ஒரு 'கண்டம்' நேரவிருக்கிறது என்று அவரது சோதிடர் சொன்ஞராம்!

சோதிடர் சொல்லுக்கு மறுப்புண்டோ, என்று சொல்லாமல் சொல்லுகிருர் மொரார்ஜி! இல்லையா?

*

வாக்களிக்காதோர்....?

கடந்த பொதுத் தேர்தலில் வாக்களிக்காத அனைவரது பெயரையும் வாக்காளர் பட்டியலிலிருந்து எடுத்துவிட முடிவு செய்துவிட்டது, சிங்கப்பூர் அரசாங்கம்!

அந்த நாட்டுச் சட்டப்படி, வாக்குரிமையைப் பயன்படுத்தாமலிருப்பது குற்றமாகும்!

அந்த 'குற்ற'த்தைச் செய்தோர் தொகை 60,000 என்று கணக்கிடப்பட்டிருக்கிறது!

அங்ஙனம் நீக்கப்பட்டோர் பெயர் திரும்பவும் இடம் பெறவேண்டுமாஞல் அவர்கள் ஒவ்வொருவரும் ரூ. $7\frac{3}{4}$ அபராதம் செலுத்தவேண்டுமாம்!

* * *

டெலிவிஷன் "ஆகாஷ்வாணி"யான கதை!

அக்டோபர் 8—பிரிட்டனில் பொதுத் தேர்தல் நடைபெற்ற தினம்!

சிங்கப்பூரில் இருப்பதைப்போல் அந்த நாட்டில் சட்டம் ஏதும் இல்லை, அனைவரும் ஓட்டு அளித்தாகவேண்டும் என்று!

டெலிவிஷன் நிர்வாகத்தினர் மட்டும், தேர்தல் தினத்தன்று, டெலிவிஷனை "ஆகாஷ்வாணி" யாக்கிவிட்டனர்! அதாவது, நல்ல நிகழ்ச்சி—மக்கள் மனதைக் கவரக்கூடிய நிகழ்ச்சி ஏதுமில்லாமல் செய்துவிட்டனர்!

நல்ல நிகழ்ச்சிகள் இருந்தால், அவற்றைக் காணும் பொருட்டு, மக்கள் ஓட்டுச் சாவடிக்குச் செல்லாமலிருந்துவிட்டால் என்ன செய்வது, என்ற அச்சத்தாலே அவ்வாறு செய்தனராம்!

★

பட்டமோ பட்டம்!

மூட்டை சுமந்துகொண்டுதான் சென்ருன் அவன்! ஆனல் அவன் உள்ளத்திலோ எல்லையற்ற மகிழ்ச்சி!

மூட்டைக்குச் சொந்தக்காரரைப் பார்த்து. மெல்லிய குரலில் ஆரம்பித்தான், "சா...!"

"என்னப்பா, என்ன விஷயம்?"

"ஒரு மகிழ்ச்சிகரமான விஷயம், சார்! நான் இன்னும் கொஞ்ச நாளில் ஒரு பட்டதாரி ஆகப் போகிறேன்!"

ஆச்சரியம் தாங்கவில்லை, அவனைக் கூலிக்கு அமர்த்திக் கொண்டவருக்கு! "ரொம்ப சந்தோஷம்! நீ எந்தக் கல்லூரியிலப்பா படிக்கிருய்?"

"கல்லூரியிலா?" அந்தக் கூலிக்காரன் கேட்டான்! அந்தக் கேள்வி, அவரது உள்ளத்தில் கேள்விக் குறியை ஏற்படுத்திவிட்டது!

"கல்லூரியில் படிக்காமலே பட்டம் வாங்கப்போகிறேன் என்கிருனே, இது என்ன பட்டம்? எதற்காக வழங்கப்படுகிறது? வழங்குவது யார்? அவரது உள்ளத்தில் எழுந்த கேள்விகள் இவை!

இவற்றை உணர்ந்து கொண்டதுபோல் போர்டர் மெள்ளச் சிரித்துக்கொண்டே கேட்டான் "பணம் கொடுத்தால் பட்டம் கொடுக்கிருர்கள்,' இதற்குப் போய் கல்லூரியில் படிக்கவேண்டுமா சார்?"!

"பணம் கொடுத்தால் பட்டம் தருகிருர்களா? யாரப்பா உனக்குச் சொன்னது?"

"யார் சார் சொல்லவேண்டும்? அதுதான் ஏராளமாகத் தருகிருர்களே அமெரிக்காவில்! 100 டாலர் கட்டணம் செலுத்திவிட்டால் போதுமே! தெரியாதா உங்களுக்கு?" என்ருன், அவருக்குத் தெரியாத ஒருஉண்மையை அவன் தெரிந்து வைத்திருக்கின்ற பெருமை முகத்தில் தோன்ற!

அதிர்ச்சியடைந்தார்! அமெரிக்காவிலா அப்படி, என்ற கேள்வி எழுந்தது அவருள்ளத்தில்!

காரணம், அவர்தான் அமெரிக்க நாட்டுக் கல்விக் குழுவின் தலைவர்! — டாக்டர் ஆர்தர் ஆடம்ஸ் என்பார்!

மேலே எடுத்துக் காட்டப்பட்டிருக்கிற உரையாடல் நடைபெற்றது, ஆப்பிரிகாவில்!

அமெரிக்காவிற்கு வந்ததும், ஆப்பிரிகாவில்தான்கேள்விப்பட்ட செய்திகள் உண்மைதானு என்ற ஆராய்ச்சியில் மிகத் தீவிரமாக ஈடுபட்டு, முடிவில் ஒரு நூல் வெளியிட்டிருக்கிருர், அமெரிக்கக் கல்விக் கழகத்தின் சார்பில்!

"அமெரிக்க பட்ட உற்பத்திச்சாலைகள்" (American Degree Mills) என்ற அந்த நூல் பற்பல சுவையான செய்திகளை — வேடிக்கையான உண்மைகளை எடுத்துக்காட்டுகிறது.

இதோ அந்த நூலில் வெளியிடப்பட்டிருக்கிற ஒரு பகுதி:—

"பட்டங்களை ஏற்றுமதி செய்வது, கோடிக்கணக்கில் டாலர் ஈட்டித் தரும் பெரியதோர் வியாபாரமாகிவிட்டது! குழுவின் கணக்குப்படி, இந்தப் பட்டங்களைப் பெறுவதற்கு ஆண்டொன்றுக்கு 7½ கோடி டாலர், ஏறக்குறைய 75,000 பேர்களால் தரப்படுகிறது! பட்டங்களை வழங்குகிற இந்த அமைப்புகள் உண்மை அமைப்புகளல்ல! வகுப்பறை ஏதுமில்லாமல், நூல் நிலையமில்லாமல், வேறு எந்த வித வசதியுமல்லாமல், இவற்றின் இருப்பிடம் எங்கேஎன்றும் கண்டுபிடிக்கமுடியாத வகையில் இயங்கிவருகிற இந்த அமைப்புகள் சில ஒழுக்கங்கெட்டவர்களால், சுயநலமிகளால், எந்த விதத் தகுதியும் திறமையும் அற்றவர்களால் நடத்தப்படுகின்றன!"

எப்படியிருக்கிறது நிலைமை? ஆச்சரியம்தான்! ஆனலும் உண்மை!

இந்த அமைப்புகளின் அலுவலகங்கள் தனியாக எங்கும் இருப்பதில்லையாம் — தபால் நிலையம் தானும்!

பட்டம் வேண்டும், அதனைப் பெறுவதற்கான வழிவகைகள் என்ன? செலுத்தவேண்டிய கட்டணம் எவ்வளவு? என்று இங்ஙனம் பல கேள்விகளைக் கேட்டுக் கடிதங்கள் வருமல்லவா? அந்தக் கடிதங்களையெல்லாம், தபால் நிலையத்திலேயே வந்து வாங்கிச்சென்றுவிடுகின்றனராம், "பட்ட உற்பத்திச் சாலையினர்!"

இதுபோன்ற உற்பத்திச் சாலைகள் 200க்கு மேல் இருக்கின்றனவாம், அமெரிக்கா முழுவதிலும்!

B. A.—M. A.--பட்டங்கள் மட்டுமல்ல, மிகுதியாக நேரத்தைச் செலவிட்டு, ஆராய்ச்சி செய்து பெறப்படுகிறதே "டாக்டர்" என்னும் பட்டம், அதைக்கூட மிக எளிதில் பெற்றுவிடலாமாம், குறிப்பிட்ட தொகை கட்டணமாகச் செலுத்தப்பட்டால்!

ஒரு பட்டத்திற்குச் சாதாரணமாக 150 டாலர் வசூலிக்கப்படுகிறதாம்!

இந்தப் பட்டங்களைப் பெற வேண்டுமென்று, இந்தியா, பாகிஸ்தான், எகிப்து, பர்மா, ஆகிய நாடுகளிலிருந்து ஏராளமான கடிதங்கள் வந்து குவிந்தவண்ணமிருக்கின்றனவாம்!

கடிதங்கள் மட்டுமா — பணமும் கூடத்தான்!

★

இரு கோணங்கள்

— பழநி —

பிற்பகல் இரண்டு மணிக்கு அலுவலகத்தின் வாயிலில் நுழைந்துகொண்டிருந்தேன். கோடை காலத்திற்காகப் போடப்பட்டுள்ள பந்தலில் ஏறக்குறைய எழுபது வயதிற்கும் மேற்பட்ட கிழவி ஒருத்தி கூனிக்குறுகி முடங்கிக்கொண்டு படுத்துக் கிடந்தாள். வெயிலின் கொடுமை மிகுந்த அந்த நேரத்தில் பந்தலின் நிழல் அவளுக்கு இதமாக இருந்தது போலும்!

அழுக்குப் படிந்து, பழுப்பேறிய, கந்தலை உடுத்தி இருந்தாள். தலைக்கு ஒரு சிறிய துணி மூட்டையை உயரத்திற்காக வைத்திருந்தாள். அவள் உடுத்தி இருந்த கந்தலையே இழுத்துப் போர்த்தி முக்காடிட்டுக்கொண்டு படுத்திருந்தாள். உடல் அசைவு கொஞ்சம்கூட இல்லை. உடலெல்லாம் ஈ மொய்த்துக்கொண்டிருந்தது. உள்ளே நுழைந்த நான தயங்கி நின்றேன். அந்த உடலில் உயிர் இல்லையோ? சற்றுக் கூர்ந்து கவனித்தேன். கட்டை விரல் இலேசாக அசைந்தது. காலில் உட்கார்ந்திருந்த ஈயைக் கையினால் விரட்டக்கூடச் சக்தி இல்லாமல் கால் விரலை மட்டும் அசைத்து விரட்டினாள் போலும்! அந்த விரலை நன்றாகக்கூட அசைக்க அவள் உடலில் தெம்பில்லை. இவள் இங்கே படுத்திருக்கிறாளே; இவ்வளவு பலவீனமாக உள்ளவளுக்குத் திடீரென உயிர் போய்விட்டால்! பந்தலைவிட்டு எட்டிப்போய்ப் படுக்கச் செய்யலாமா? என்று எண்ணினேன். சே! இந்த நிலையில் அவளை எழுப்பித் தொந்தரவு செய்யக்கூடாது, இந்த வெயிலில் வேறு எங்குதான் — செனறுபடுப்பாள். வேறு இடத்திற்கு எழுந்து செல்வதற்குக்கூட அவள் உடலில் தெம்பில்லையே! என்று எண்ணியவாறே அலுவலகத்தினுள் சென்றுவிட்டேன்.

மாலை ஆறுமணிக்கு அலுவலகத்திலிருந்து வெளியே வந்து பார்த்தபோது, பிற்பகலில் பார்த்த அந்தக் கிழவியைக் காணவில்லை. எழுந்து சென்றுவிட்டாள் போலிருக்கிறது என்று எண்ணியவாறே இரண்டு மூன்று கடைகளுக்கு அப்பால் இருந்த சிற்றுண்டிக் கடையின் பக்கம் திரும்பினேன். அந்தக் கடையின் முன்னால் நான் பிற்பகல் பார்த்த கிழவி அமர்ந்திருந்தாள்.

ஒத்த வயதுடைய இரு சிறுமிகள் சிற்றுண்டிக் கடையிலிருந்து வெளிவந்தனர். ஒரு பெண்ணின் கையில் பலகாரப் பொட்டலம் ஒன்று காட்சியளித்தது. இருவரும் அந்தக் கிழவியைத் தாண்டிச் சென்றுகொண்டிருந்தனர்.

தமிழ்க்கூத்தன்

அந்தப் பெண்களை நோக்கிக் கையை நீட்டி ஏதோ கிழவி கேட்டாள். ஒருபெண் திரும்பி வந்து என்ன என்று வினவினாள். மற்றொரு பெண் அவளைப் பிடித்து இழுத்துக்கொண்டு சென்றுவிட்டாள். கிழவி தனது கையிலுள்ள காசைக்கொண்டு சிற்றுண்டி ஏதாவது அந்தப் பெண்ணை 'வாங்கித் தரச்சொல்லி இருப்பாள் போலிருக்கிறது என்று பிறது தெரிந்துகொண்டேன்.

பிறகு நானும் அந்த வழியே சென்றுகொண்டிருந்தேன். என்னிடமும் அந்தக் கிழவி கையை நீட்டி ஏதோ கூறினாள். அவள் நாக்குக் குழறி குழறிப் பேசினாள். அவள் என்ன கூறுகின்றாள் என்பதே எனக்குப் புரியவில்லை. கையை நோக்கினேன். கையில் மூன்று காலணாக்கள் காட்சியளித்தன. சிற்றுண்டிக் கடையைச் சுட்டிக்காட்டி ஏதோ கூறியதால், அவள் ஏதாவது சிற்றுண்டி வாங்கித்தரச் சொல்லுகிறாள் போலிருக்கிறது என்பது புலனாகியது. அவள் வைத்திருக்கிற முக்காலணாவைக்கொண்டு என்ன வாங்க முடியும்? எனவே பையைத் தடவிப் பார்த்தேன்; காசு ஏதும் இல்லை. எப்பொழுதும் எனது பையில் ஏதாவது ஓரணா இரண்டணாவாவது இருக்கும். அன்று என்னவோ எனது சட்டைப் பையில் காலணாக்கூட இல்லை. இப்படிப்பட்டவர்களுக்கு உதவி செய்வதற்கு இயற்கைகூடச் சதி செய்கிறதே என்று எண்ணி வருந்தியவாறே அவளைக் கடந்து அப்பால் சென்று ஒரு நண்பரின் தையற்கடையில் அமர்ந்தேன்.

வறுமைப் பிணியோ மிகவும் கொடியது, மூப்புப்பிணியும் அதோடு சேர்ந்துகொண்டால் கேட்கவேண்டுமா? மூப்பின் தளர்ச்சியினால் நடக்கக்கூட இயலாமல் நகர்கிறாள் என்பதை, அவள் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து சற்று நகர்ந்து சென்றதும்தான் எனக்குப் புலனாகியது. இந்தக் காட்சி என்னைக் கவர்ந்து வாட்டுவதுபோல், மற்றவர்களின் கவனத்தைக் கவரவில்லையே! என்னைவிட அந்தஸ்திலும் பணத்திலும்

உயர்ந்தவர்கள் எத்தனையோபேர் அந்தக் காட்சியைப் பார்த்துவிட்டுப் போகிறார்கள், அவர்களெல்லாம் கவலைப்படுவதாகவோ, இரக்கப்படுவதாகவோ தெரியவில்லையே' நான் இரக்கப்படுவதைவிட அவர்கள் இரக்கப்பட்டால் எவ்வளவோ நன்மை பயக்குமே! பணத்தின் வாய்ப்பாகப் பெறுகிற இன்பத்தை அனுபவித்து அனுபவித்து பழக்கப்பட்டுவிட்டதால் வறுமையின் வாய்ப்பாகப் பெறுகிற துன்பத்தின் கஷ்டம் அவர்களுக்குத் தெரிவதில்லைப்போலும்! போதுமான அளவு வருவாய் வராததினால் வாழ்க்கைப் போராட்டத்திலே சுழன்றுகொண்டிருக்கும் காரணத்தினால்தான் எனக்கு அந்தக் கிழவியின் மூப்பும், வறுமையின் காரணமாக அவள் பிச்சை எடுப்பதும் என்னை அனுதாபத்திற்கு ஆளாக்குகிறதோ?

அந்தச் சிற்றுண்டிச் சாலையின் முதலாளி வெளியில்வந்து வெற்றிலை பாக்கு எச்சிலை உமிழ்ந்துவிட்டு வாயைக் கொப்பளித்துக்கொண்டிருந்தார். அவரிடம் கையை நீட்டி ஏதோ கூறினாள் அந்தக் கிழவி. அதற்கு அவர், போ, போ, பக்கத்தில் போய்ப்பார் என்று கூறினார். வாயைக் கொப்பளித்துவிட்டு அவர் உள்ளே சென்றதும்கூடக் கிழவி அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

அந்தக் கிழவியின் நிலையையும் உடையையும் பார்த்து, சிற்றுண்டிச்சாலையின் முதலாளி, அசூயைப் படுகிறாரேதவிர, அனுதாபப்படவில்லையே? இவர் மனம் என்ன கல்லா? என்று அவர்மீது வெறுப்படைந்தேன். அந்த நேரத்தில் எனது நண்பன் ஒருவன் அங்கே வந்தான். அவனைக் கூப்பிட்டு, காசு இருந்தால் நாலணா கொடு என்றேன், அவன் பையைத் துழாவிப்பார்த்துவிட்டு, இரண்டணாதான் இருக்கிறது என்று சொல்லி அதைக்கொடுத்துச் சென்றான். அதைக்கொண்டு அந்தக் கிழவிக்கு ஏதாவது வாங்கிக் கொடுக்கலாம் என்று எண்ணிச் சிற்றுண்டி நிலயத்தின் உள்ளே சென்றேன்.

சோமு என்ற ஒரு வாலிபன் நாற்காலியில் அமர்ந்திருந்த அந்தச் சிற்றுண்டிச்சாலை முதலாளியின் முன்னால் பில்லை மட்டும் வைத்துவிட்டுக் காசு கொடுக்காமல் சென்றான். சோமு, அந்த வட்டாரத்திலே பிரபல பயில்வானாக உள்ளவன். சில சமயங்களில் கையில் காசு இருந்தால் காசு கொடுப்பான்; இல்லாவிட்டால் இப்படித்தான் பில்லைமட்டும்வைத்துவிட்டுச் சென்றுவிடுவான். முதலாளியும் அவனை ஒன்றும் கேட்கமாட்டார். அப்படி ஏதாவது கேட்டுவிட்டால் மறுநாள் அவனுடைய சகாக்களை ஏவி விட்டுவிடுவான். பிறகு ஒவ்வொரு டபரா செட்டுகளாகக் காணமற் போய்க்கொண்டிருக்கும். கடையினுள்ளேயே, அவனுடைய சகாக்கள் வேண்டுமென்றே அடித்துக்கொண்டு சாமான்களை வேறு பாழ்படுத்திவிடுவார்கள். எனவே முதலாளி இந்த வம்பெல்லாம் வைத்துக் கொள்வதில்லை.

அடுத்து ஒருவன், அவனுக்கு வேண்டியதைச் சாப்பிட்டுவிட்டு வந்து, ஐயா வீட்டில் பாதம் அல்வா வாங்கிவரச் சொன்னார்கள் என்றுகூறி முதல்தரமான இனிப்புப் பண்டங்களைக் கையில் வாங்கிக்கொண்டு சென்றான். இவனையும் எனக்குத் தெரியும். இவ்வூர்ச் சுகாதார அதிகாரியின் வேலைக்காரன். இவனும் இப்படித்தான் அடிக்கடி சிற்றுண்டிக் கடைக்கு வந்து தானும் உண்டுவிட்டு, ஐயாவுக்கு என்று சொல்லிக் கையிலும் ஏதாவது வாங்கிச் செல்லுவான். அதுபோலத்தான் அன்றும் வாங்கிச்சென்றான்.

என்ன உலகம்? ஒரு பக்கத்திலே—அவசியமில்லாமல், அ வசியமாகச் செலவு செய்கிறது அதே நேரத்தில் ஏழை எளியவ களுக்கு ஒருசிறுஉதவிகூடச்செய் முன்வருவதில்லை.

இந்த ஏழைக் கிழவிக்கு உதவி செய்வதினால் என்ன பலன் என்று நினைக்கிறார் போலும்! இதை எல் லாம் எண்ணியதும், அவர் மீ ருந்த வெறுப்பு இன்னும் அதி மாக உயர்ந்தது. நண்பனிட கடன் வாங்கிய இரண்டணாவுக்கு இட்லி வாங்கி அந்தக் கிழவிக்கு கொடுத்தேன். அவள் அ வாங்கிக்கொண்டு "நல்லா இருக் ணும் சாமி" என்று வாய் குழறி படியே கூறினாள்.

ஓர் அணாதைக்கு, பசியின வாடிய ஓர் ஏழைக்கு, உதவிசெய் வெற்றிக்களிப்பில் மூழ்கிப் பெ மிதத்தோடு சிற்றுண்டி நிலய தின் படியிலிருந்து இறங்கி வெ யில் வந்தேன். புதிய நாட்டை கண்டுபிடிப்பதற்காக கடலி வெகுதூரம் பிரயாணம் செய்து நாட்டைக் காணமல் வருந்தித் த

எதிர்பாருங்கள்!

தோழர்:

ப. உ. சண்முகம் எம். எல். ஏ.,

அளிக்கும்

"பொன்னித்தீவில் கன்னித்தெய்வம்"

என்ற தொடர் கதை

விரைவில் இடம்பெறும்.

ரைக்கும்படி கவலைகொண்ட
கொலம்பஸ்'' திடீரென்று நாட்
டைக் கண்டுபிடித்ததும் எவ்வ
வு மகிழ்ந்திருப்பாரோ! அவ்வளவு
கிழ்ச்சி, அந்தக் கிழவியின் நிலை
யைக் கண்டு உதவிசெய்ய முடிய
வில்லையே என்று எண்ணி ஏங்கி
இருந்தபோது, நண்பனின் உதவி
கொண்டு அவளுக்கு உதவி செய்
ததும், எனக்கு ஏற்பட்டது.

வீடு நோக்கி நடந்துகொண்டி
ருந்த எனது இதயத்திலே பலப்
பல சிந்தனைகள் எழுந்தன. முன்
காலத்தில் அன்பும், அறிவும்,
கையும் மனிதாபிமானமும் உள்ள
வனைத்தான் மக்கள் மதித்து வந்த
னர். ஆனால் இக்காலத்திலோ
ஒருவனுக்கு இருக்கின்ற காரை
யும் மாளிகையையும் ஏனைய சொத்
துக்களையும் கொண்டுதான் மக்கள்
அவனை மதிக்கிருர்கள். எனவே
அத்தகைய சொத்துக்கள் பெறுவ
தற்குப்பணம் மூலாதாரமாக இருக்
கிறது—ஆகையால் அத்தகைய
பணத்தை எப்படியாவது பெற
வேண்டும் என்றுஎண்ணுகிருர்கள்
இக்காலத்தவர்கள். அந்தப்பணம்
நேரியாகக் கிடைக்காவிட்டால்
தவறுக்கு வழியைக்கூடக் கையாளு
கிருர்கள். பணத்தைச் சேர்க்க
வேண்டும் என்ற ஒரே குறிக்
கோளைத் தவிர இவர்களுக்கு,
வெளி உலகத்திலுள்ள ஏழைஎளி
யவர்களைப்பற்றியோ — நாட்டின்
நிலைபற்றியோ கவலை ஏற்படுவ
தில்லை. மது உண்டவன் போதை
யின் காரணமாக வெளி உலகை
மறந்துவிடுவதுபோல், பணம் என்
னும் மதுவை விரும்புகிறவன்
அதன் மயக்கத்திலே நாட்டின்
வறுமை, போன்றவைகளை மறந்து
விடுகிருன். இந்நிலை மாறவேண்டு
மானுல் காலத்தின் போக்கு மாற
வேண்டும். ஆம்; பணத்திற்கு
மதிப்புக்கொடுக்கின்ற இன்றைய
நிலை மாறி, அறிவு, நல்லொழுக்கம்,
பிறர்க்கு உதவுதல், போன்ற நல்ல
இயல்களுக்கு மதிப்புத் தருகின்ற
அந்த உயர்ந்த பண்பு மக்களி
டையே வளரவேண்டும். அந்தப்
பண்பு வளருமா?

★

மறைந்து கிடக்கும் மாபெரும் சின்னங்கள்

—(காஞ்சி—வில்லவன் கோதை)—

"உலகிலேயே ஒப்பற்ற ஒரே நாகரிகம் திராவிடருடையது'' என்ற கருத்து, வரலாற்றுப் பேரறிஞர்கள் வாயிலாகப் பெறப்படுகிறது. இதைச் சொன்னவர்கள் திராவிட நாகரிகத்தை ஆழ்ந்து அறிந்தவர்கள் அல்லர். உலகம் என்ற புத்தகத்தைப் புரட்டும்போது அதிலே ஆயிரமாயிரம் கல்வெட்டுக்களையும், பன்னூற்றுக்கணக்கான ஆதாரங்களையும் நாம் காணமுடியும். புதைந்துகிடக்கும் அந்த ஆதாரங்களைப் புத்துலகுக்குக் கொண்டு வரும் பணியில் ஈடுபட்ட வரலாற்றறிஞர்கள் திராவிடநாகரிகத்தைப் பற்றி அங்கொன்றும் இங்கொன்றுமாக வரைந்து தள்ளியிருக்கிருர்கள். அவை முழுவதும் வெளிக்கொணரப்பட்டுத் திராவிட நாகரிகம் சிறப்பான முறையில் எழுதப்படுமானுல் அதைவிடச் சிறந்த பணி வேறெதுவும் இருக்கமுடியாது. சிதைந்து கிடக்கும் நமது நாகரிகச் சின்னங்கள் தொகுக்கப்படுமானுல் வரலாற்றுலகிலே பெரும்புரட்சியைக் காணமுடியும்.

திராவிட நாகரிகச் சின்னங்களை ஆராய்வோரை இருவகையாகப் பிரிக்கலாம். அதிலே குறைகாண வேண்டும் என்ற கொள்கைகொண்டோரும், அதன் உன்னதச்சிறப்பை உலகுக்குணர்த்திட வேண்டுமென்ற உயரிய இலட்சியம் கொண்டோரும் ஆக இருபெரும்பிரிவினர். திராவிட இனத்தின் சிறப்புக்கள் சிலருக்குக் 'கசப்பான உண்மை'களாகக் காட்சியளிக்கலாம். அத்தகையவர்களுக்கு நாம் சொல்வது இதுதான்: "விலகி இருங்கள்; வீணுக் குறுக்கிடாதீர்கள்!'' அன்று மொகஞ்சதாரோ சின்னங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டபோது சிலர் "இச் சின்னங்கள் ஆரிய நாகரிகத்தைப்பற்றி அறிவிக்கின்றன'' என்று 'வெத்துவேட்டு'' எழுப்பி வந்தார்கள். ஆங்கில அறிஞர்களின் ஆதாரபூர்வமான அறிக்கை அவற்றை அடக்கியது. எனவே, இந்தத் துறையிலே புகும் நம்மவர் மிக விழிப்போடும் கவனத்தோடுமிருத்தல் வேண்டும்.

இந்திய சர்க்காரின் உதவியை இத்துறையில் எதிர்பார்ப்பது முடிவில் இலவுகாத்த கிளியாக நாம் ஏமாற நேரிடும். இவ்வாராய்ச்சித் துறையில் புகுதற்கு மொழியியல் வல்ல திராவிட இளைஞர்கள்தான் முன்வரவேண்டும்.

உதாரணத்திற்கொன்று சொல்லுவோம்: **பசிபிக் தீவான ஹவாய்த் தீவிலே திராவிடரின் மொகஞ்சதாரோ, ஹரப்பா சின்னங்களையொத்த உருவங்கள்பொறிக்கப்பட்ட பாறைகள் பல கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.** இந்தியாவின் பழம்பொருள் பாதுகாப்புத்துறையின் உதவி டைரெக்டர் ஜெனரல் ஹவாய்த் தீவுகளுக்குச் சென்று வந்தார். **அங்கே சேர, பாண்டியரின் அரசியல் முத்திரைகளான வில், கயல் ஆகிய உருவங்கள் அப்பாறைகளில் பொறிக்கப்பட்டுள்ளன.**

—அமெரிக்கன் ரிப்போர்ட்டர்.
12—10—'55.

மேற்கண்ட செய்தியின் மூலம் திராவிடத்திற்கும் பசிபிக்தீவுகளுக்கும் என்றோ ஓர் நாள் தொடர்பு இருந்திருக்கிறது என்பது வெளிடைமலையாகிறது. உலகத்திற்கெல்லாம் தன் ஒப்பற்ற நாகரிக அமுதத்தை வாரி வழங்கிய திராவிடன் இத்தீவுகளுக்கும் அதனை அளித்திருக்கிருன் என்பதை அங்குள்ள பாறைச் சிற்பங்கள் பகர்கின்றன.

அமைதி நிலவும் ஹவாய்த் தீவுகளின் அடர்ந்த பெரும் புதர்களிலும் மனிதன் புகமுடியாத காடுகளின் மூலை முடுக்குகளிலும், பாறை இடுக்குகளிலும் நம்முடைய இணையில்லா நாகரிகம் மறைந்து கிடக்கிறது. "திராவிடப் பெருங்குடி மகனே! உன் பழம்பெரும் நாகரிகத்தைப் பாதுகாத்துவரும் எங்களை, என்றுதான் பாரின் அரங்கிலே நிறுத்திப் பரவசமுறப் போகிருயோ?'' என்று அங்கே உள்ள பாறைச் சிற்பங்கள் பெருமூச்சு விட்டுப் பேசுகின்றன! அவற்றிற்கு உரிய பதிலை அளிப்பது உங்கள் கடமையல்லவா!

“சிந்தித்துச் செயல்படுவீர்!”

எங்கும் நிலத்துக்கடியில் கனிப் பொருள்கள்! கடல் நீருக்கடியில் கலாப முத்து! காட்டிலே அகில்! மலை முகட்டிலே முகில்! நீர் பொங்கும் ஆறுகள்! பொய்க்காவயல்கள்! வீட்டிலே சிங்காரச் செல்வம்! களத்துமேட்டிலே செந்நெற் குவியல்! காவினிலே காட்சி தரும் பூ வண்ணம்! எனத்தக்க இத்தகைய இயற்கை கொஞ்சும் சுந்தரப் பூமிக்குச் சொந்தக்காரர்கள் நாம்!

இந்தத் தங்கத் திருவிடத்தின் கத்தும் கடல் முத்து உலக அழகிகளின் உடலை மேலும் அழகு செய்தன! இரத்தினக் கம்பளங்கள் எல்லா நாட்டு அரச மாளிகைகளையும் அலங்கரித்தன! எழில் பட்டாடைகள் எட்டுத் திக்குப் பட்டத்தரசர்களாலும் வாங்கிச் செல்லப்பட்டன! இன்ப வாழ்விற்கான எல்லாவற்றிற்கும் எல்லா நாட்டு மக்களும் இந்த நாட்டு வாசலிலே வந்து நின்றனர்! இப்படிப்பட்ட பண்பாடும் பண்பட்ட அறிவாற்றலுமுடைய பரம்பரையினர் நாம்!

இந்தத் தமிழ்த்தரணியில் மயில் ஆடிய அழகையும், குயில் பாடிய குரலின் இனிமையையும், பாவலர்கள் பாடியிருக்கிறார்கள்! இந்நாட்டு வீரர்கள் வீசிய வேல்பற்றிக் கிரேக்கத்திலும் கிழக் கடாரத்திலும் பேசியிருக்கிறார்கள்! எதற்கும் ஈடற்ற மானம் தவிர்த்த ஏனைய எதைக் கேட்டாலும் இல்லையென்னாது வழங்கும் இந்நாட்டவரின் ஈகையைபபற்றி எகிப்திலும் ஈழத்திலும் ஏற்றிப் போற்றியிருக்கிறார்கள்! இவ்வாறான வீர பூமிக்குச் சொந்தக்காரர்கள் நாம்! ஈர நெஞ்சுடைய தீரர் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் நாம்!

என்றாலும், வரலாறு காட்டும் வானளாவிய பெருமைக்கும் பெரும் புகழுக்குமுரிய நம்முடைய இன்றைய நிலை என்ன?

அன்று நாடாண்ட நாம்தான் இன்று நாடற்றவர்கள் என்று ஏசப்படுகிறோம்! நாடோடிகள் என்று பேசப்படுகிறோம்! அன்று பாங்கான வாழ்விற்கான எல்லாம் பாரோர்க்கு வழங்கிய நாம்தான் இன்று பஞ்சைகளாய் — பராரிகளாய் வாழ்கிறோம்! அன்று எட்டுத் திக்கும் வெற்றி முரசு கொட்டிப் பார்புகழப் பவனிவந்த பரம்பரையினர்தான் இன்று சிங்கப்பூரிலே — சிலோனிலே சிந்தை நொந்திருக்கின்றனர்! செயலற்றிருக்கின்றனர்! அங்கெல்லாம் நம்மவர்கள் அல்லற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்! அங்குள்ளவர்களால் நம்மவர்கள் அவமானச் சின்னமாகக் கருதப்படுகின்றனர்! இங்கேயுள்ள நாமோ கைபர் கணவாய்க்கருகில் இருந்துகொண்டு கஜினி வருவானோ! கோரி வருவானோ! எந்த நேரத்தில் எவன் வருவானோ என்ற வாட்டத்துடனும் வருத்தத்துடனும் இருந்து வந்தவர்களுக்குக் கட்டியங்கூறிக் காணிக்கை தருவோராக — எடுபிடி வேலைசெய்யும் அடிமைகளாக இருந்து வருகிறோம்! அவர்தம் ஆதிக்கத்திற்கு அடிபணிந்து கிடக்கிறோம்!

செல்வன்

இன்று நம் வாழ்வு எங்கோ உள்ள டெல்லியால் நிர்ணயிக்கப் படுகிறது. இந்நாட்டு வளங்களையெல்லாம் டெல்லி அள்ளிக் கொண்டுபோகிறது. இங்கேயுள்ள நாம் வரியாகத்தரும் வெள்ளிப் பணமெல்லாம் டெல்லியின் இரும்புப் பெட்டிக்குப் போய்ச் சேரு கிறது. இந்த நிலைமை — இந்த அடிமை நிலைமைக் காரணத்தால்தான் அந்நிய நாடுகளில் அவதியுறும் நம் சகோதரர்களுக்கு நாம் எதுவும் செய்ய இயலவில்லை என்பது மட்டுமல்ல, இங்கேயும் நாம் வாழ முடியவில்லை. வளமனைத்தும் பெற்றிருந்தும் வரிப்பணங்களையெல்லாம் கொடுத்தும் வாழ்வில் இன்பமின்றித் துன்பத்தால் வாடுகிறோம்! துயரால் வருந்துகிறோம்!

நம்நாட்டு வளத்தைக்கொண்டு, நாம் தரும் வரிப்பணத்தைப் பெற்று வடநாட்டுச்சர்க்கார்நம்மை வஞ்சித்துவிட்டு வாழ்வளிக்கும் பெரும் திட்டங்களையெல்லாம் வடநாட்டிலே நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது; நிறைய இன்னும் திட்டங்களின் பட்டியல் அங்கே நீண்டு கொண்டிருக்கிறது!

அகிம்சா மூர்த்தி அண்ணல் காந்தியாரிடத்தில் அகில இந்தியாவின் அரசியல் நிர்வாகத்தை ஆங்கிலேயன் ஒப்படைத்துச் சென்ற பிறகு, நாட்டை வளப்படுத்தப் போவதாகவும், நம்மை வாழவைக்கப்போவதாகவும் சொல்லி ஐந்தாண்டுத் திட்டங்களைத் தீட்டினார்கள் அகில இந்தியாவின் ஆட்சிப் பீடத்திலே அமர்ந்தோர். அனைத்திந்திய அடிப்படையில் தீட்டப்பட்ட அந்த முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாய வளர்ச்சிக்கு வெகு முக்யத்துவம் அளிக்கப்பட்டதால் ஏராளமான புதிய அணைக்கட்டுகள் உருவாகவும், கிணறுகள் தோன்றவும், குழாய்

கிணறுகள் அமைக்கவும், ஏரிகள் செம்மைப்படுத்தப்படவுமான திட்டங்கள் எங்கும் பரக்க இடம் பெற்றன. என்றாலும் தென்னகத்திற்கான எந்தப் பெரிய திட்டமும் அதில் இடம்பெறவில்லை.

ஏறக்குறைய ரூ. 500-கோடி செலவில் உருவாக்கப்பட்ட கோசி அணைக்கட்டு, கொயானு அணைக்கட்டு, சாம்பல் அணைக்கட்டு, ரீகண்ட் அணைக்கட்டு ஆகிய அணைக்கட்டுகள் அனைத்தும் வடநாட்டிலேயே உருவாக்கப்பட்டுள்ளன முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் துவங்கப்படுவதற்கு முன்னால் இந்தியாவெங்கிலுமுள்ள குழாய்க் கிணறுகள் 2500-ஆகும். இவற்றில் 2300-குழாய்க் கிணறுகள் வடநாட்டிலே இருக்கின்றன. இந்நிலையில் வளர்ந்த வடநாடே வளர்ந்திடும் வகையில் முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 25 கோடி செலவில் அமைக்கப்பட்ட 6000 குழாய்க் கிணறுகளும் வடநாட்டிலேதான் அமைக்கப்பட்டுள்ளன. எனவே, முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தால் வளமும் வாழ்வும் பெற்றிருந்த வடநாட்டவர் மேலும் சீரும் சிறப்பும் பெற்றுள்ளனர். ஆனால் வறுமைச் சேற்றிலே சிக்கி வாழ்வுக்குப் போராடிக் கொண்டிருக்கும் நாம் முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முழுக்க முழுக்க வஞ்சிக்கப்பட்டிருக்கிறோம்; முன்னேற வழியேதுமின்றி முடங்கிக் கிடக்கிறோம்.

இப்படி முதலாவது ஐந்தாண்டுத்திட்டம் வடவர் கண்ணுக்கு வெண்ணெயும் தென்னவர் கண்ணுக்குச் சுண்ணாம்பும் தடவிவிட்டுச் சென்ற சூழ்நிலையில் உருவாகிய இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தியத் துணைக்கண்டம் பொருளாதாரத் துறையில் முன்னேறுவதற்கான தொழிற்சாலைகளைப் பெருக்கும் திட்டங்களில் பெரும்கவனம் செலுத்தப்பட்டு அதிலும் தென்னகம் பிற்போக்கிலிருக்குமாறு பெரிதும் வஞ்சிக்கப்பட்டுள்ளது!

எல்லா அடிப்படைத் தொழில்களிலும் இந்தியத் துணைக்கண்டம் ஏற்றம் பெற்று வளர இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதிக நாட்டம் செலுத்தப்பட்டது. எனவே, இரண்டாவது ஐந்தாண்டுத்திட்ட காலத்தில் ஏற்கெனவே உள்ள உற்பத்தியைவிட 30 இலட்சம் டன்கள் எஃகு அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டு 1961-ம் ஆண்டில் இந்தியாவின் எஃகு உற்பத்தி 43 இலட்சம் டன்களாக்கப்படவேண்டுமென நிர்ணயிக்கப்பட்டது.

இந்தத் திட்ட எல்லையை அடைய பொதுத்துறையில் ரூ. 350 கோடியும், தனியார் துறையில் ரூ. 115 கோடியும் செலவழிப்பதென முதலில் முடிவு செய்யப்பட்டது. என்ற போதிலும் எதிர்பாராத நெருக்கடிகளின் விளைவாக ஏற்பட்ட பல்வேறு மாறுதல்கள் காரணமாக இரும்பு உருக்குத் தொழிற்சாலைக்கான இந்தச் செலவு இன்னும் அதிகப்படுத்தப் பட்டுள்ளது. அதாவது தனியார் துறைக்கு ரூ. 115 கோடியிலிருந்து டாட்டா இரும்பு எஃகுக் கம்பெனிக்கு மட்டும் ரூ. 133 கோடியாகவும், பொதுத்துறைக்கு, அதாவது ரூர்கேலா, பிலாய், துர்க்காபூர் ஆகிய மூன்று இரும்பு உருக்குத் தொழிற்சாலைகளுக்கு மாத்திரம் ரூ. 353 கோடியிலிருந்து ரூ. 439 கோடியாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதுவன்றி, பொதுத்துறைத் தொழிற்சாலைகளில் புதிய குடியிருப்பு நகரங்களை எழுப்புவதற்காக ஒவ்வொரு பகுதிக்கும் ரூ. 40 கோடி வீதம் மொத்தம் ரூ. 120 கோடிவரை செலவிட அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே இம்மூன்று தொழிற்சாலைகளுக்குமாக மொத்தம் ரூ. 560 வரை செலவிடப்பட்டு வருகிறது.

இந்த ஒவ்வொரு தொழிற்சாலையிலும் இறுதியாக 7500 என்சினியர்களும் சிப்பந்திகளுந்தான் இருப்பார்களென்றாலும், இப்போது நிர்மாண வேலையில் இதைப்போல் பலமடங்கு பேர் பணியாற்றுகிறார்கள்.

ரூர்கேலாவில் 10,000 பேர் நேரடியாகவும் 46 000 பேர் கண்ட்ராக்டர்களாலும் வேலையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள்.

பிலாயில் 26 000 பேர் இலாக்கா பூர்வ சிப்பந்திகளும 38,000 பேர் கண்ட்ராக்டர் தொழிலாளர்களும் வேலை செய்கின்றனர்.

துர்க்காபூரில் 2 000 பேர் அந்நிறுவனத்தாலும் 25,000 பேர் கண்ட்ராக்டர்களாலும் வேலையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள்.

இப்படி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகிற வடநாட்டுத் தொழிற்சாலைகளின் வளர்ச்சிபற்றிய—வடநாட்டுத் தொழிலாளர்களுக்குத் தரப்படுகிற வேலைவாய்ப்புகள் பற்றிய இன்னும் சில செய்திகள் இதோ:

1. பீகார் மாநிலத்தில் ராஞ்சி அருகே ஹாதியா என்னுமிடத்தில் ஒரு கனரக இயந்திரத் தொழிற்சாலையை நிறுவத்திட்டமிட்டுள்ள இந்தியப் பேரரசு அதை நிறுவ, இரஷ்ய செக்கோஸ்லோவேக்கியா உதவி கோரிப் பெற்றிருக்கிறது. இதனையும் இதுபோன்ற இன்னும் இரு தொழிற்சாலைகளையும் நிறுவும் வேலையை கனரக இயந்திரக் கார்ப்பரேஷன் மேற்கொண்டுள்ளது. இந்த மூன்று கனரக இயந்திரத் தொழிற்சாலைகளுக்குமாக மொத்தம் ரூ. 200 கோடி செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளதாம்.

2. நிலக்கரிச் சுரங்கத்தில் பயன்படுத்தப்படும் இயந்திரச் சாதனங்களை இந்தியாவிலேயே தயாரிப்பதற்கான தொழிற்சாலை ஒன்றை சோவியத் இரஷ்யாவின் உதவியுடன் துர்க்காபூரில் துவக்க இந்தியப் பேரரசு திட்டமிட்டிருக்கிறது. ரூ. 13 கோடி செலவிடப்படவிருக்கும் இத்திட்டத்தின்மூலம் 3500 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கப்பட்டு ஆண்டுதோறும் 33000 டன் எடையும், ரூ. 15 கோடி மதிப்புமுள்ள இயந்திரங்கள் தயாரிக்கப்படுமாம்.

3. ரூ. 52 கோடி மூலதனத்தோடு போபாலில் நிறுவிவரும் கனரக மின்சார இயந்திர உற்பத்திச் தொழிற்சாலையின் உற்பத்திச் சக்தியை இரட்டிக்க இந்தியப் பேரரசு முடிவு செய்திருக்கிறது. இதற்கான செலவையும் இப்போது ரூ. 70 கோடியாக உயர்த்தியிருக்கிறது. இத்தொழிற்சாலையை நிறுவ 10,000 தொழிலாளர்களைக் கொண்டு இரவு பகல் பாராமல் வேலை செய்து வருகிறது. இதற்கான எரிவாயு உற்பத்திச்சாலையைக் கட்டித்தரும் பொறுப்பை இலண்டனிலுள்ள நிறுவனம் ஒன்று ஏற்றுக்கொண்டிருக்கிறது. நாளொன்றுக்கு 1500000 கனஅடி எரிவாயுவை உற்பத்திச் செய்யும் இத்தொழிற்சாலை 1,25,000 பவுன் செலவில் நிர்மாணிக்கப்படுமாம்.

4. இந்தியத் துணைக்கண்டத்தில் அலுமினியத் தொழிலுக்கு சாதகமாகவுள்ள அரிய வாய்ப்புக்களைப் பயன்படுத்தி வடநாட்டு முதலாளி பிர்லாவும் அமெரிக்க அலுமினிய நிறுவனமான கெய்சர் கம்பெனியும் கூட்டாகச் சேர்ந்து ஒரு அலுமினியத் தொழிற்சாலையை உத்தரப் பிரதேசத்திலுள்ள ரீகாண்ட் பகுதியில் நிறுவ முற்பட்டுள்ளனர். மொத்தம் ரூ. 16 கோடி மூலதனமிடப்படுகிற இத்தொழிற்சாலை இந்தியாவெங்கும் பெருகிவரும் அலுமினியத் தேவையைப் பூர்த்திசெய்யும் வகையில் ஆண்டுதோறும் 20000 டன் அலுமினியம் உற்பத்தி செய்யுமாம்.

5. விக்கர்ஸ், பாப்காக், மற்றும் வில்மாக்ஸ் என்ற இரு பிரிட்டிஷ் நிறுவனங்களின் கூட்டுறவுடன் ஒரு இந்திய நிறுவனத்தால் நடத்தப்படும் சிமெண்ட் உற்பத்தி, சுரங்க வேலை இவற்றிற்கான இயந்திரங்கள் மற்றும் பாய்லர்கள் உற்பத்திக்கான ஏ. வி. பி. லிமிடெட் என்ற பெயருடைய தொழிற்சாலை ஒன்று துர்க்காபூரில் துவங்கப்படுகிறது. ஏற்கனவே இங்கு துவங்கப்பட்டுள்ள அரசினர் உருக்குத் தொழிற்சாலையிலிருந்து தனக்குத் தேவையான உருக்கைப் பெற்றுக்கொள்ளவிருக்கும் இத்தொழிற்சாலைக்கு ரூ. 20 கோடி மூலதனமிடப்பட்டுள்ளதாம்.

இப்படிப் பொதுத்துறையிலும் தனியார்துறையிலும் கோடி கோடியாக ரூபாய்களைக் கொட்டிக் குவித்து வடநாட்டிலே அடுக்கடுக்காக அணைகள் கட்டப்படுகின்றன; ஆலைகள் நிறுவப்படுகின்றன. ஆனால் தென்னாட்டைப் பொறுத்தவரை இரண்டுஐந்தாண்டுத் திட்டங்களிலுமாக மொத்தம் ரூ. 100-கோடி மூலதனமிடப்பட்ட பெங்களூரிலுள்ள இந்துஸ்தான் விமானத் தொழிற்சாலை, டெலிபோன் தொழிற்சாலை, இருந்ததை விரிவாக்கிய பெரம்பூர் இரயில் பெட்டித் தொழிற்சாலை ஆகிய மூன்று தொழிற்சாலைகள்தான் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இன்னும் எத்தனையோ தொழிற்சாலைகள் இத்தென்னாட்டில் ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் இருந்தும்-வசதிகள் இருந்தும் இங்கு எந்தத் தொழிற்சாலையையும் ஏற்படுத்தும் எண்ணம் இந்தியப் பேரரசுக்கு இல்லை. இங்குள்ளோரின்கண் துடைப்புக்காக ஏதோசில தொழிற்சாலைகளுக்கான திட்டங்களைத் தீட்டினாலும் அவைகளை நிறைவேற்றுவது பற்றிய பேச்சு வார்த்தையிலேயே காலத்தைக் கழிக்கிறதே தவிர, தீட்டிய ஏட்டிலுள்ள திட்டத்தை நாட்டில்செயல் படுத்தவில்லை — செயல்படுத்தப் போவதாயும் தெரியவில்லை. தென்னாட்டிற்கான எந்தத் திட்டமாக இருந்தாலும் ஏதாவதொரு காரணத்தைக் காட்டித் தட்டிக்கழிக்கிறதே தவிர—மாற்றாந்தாய் மனப்போக்கில் நடக்கிறதே தவிர, தென்னாட்டின் வளத்தைப் பெருக்கி, தென்னாட்டவரின் வாழ்வைச் சிறக்கவைக்கும் எதையும் இந்தியப் பேரரசு இதுவரை செய்யவுமில்லை; இனிச் செய்வதாயும் தெரியவில்லை.

எனவேதான் இன்பத்திராவிடத்தின் இணையற்ற விடுதலை இயக்கமாக வளர்ந்து வருகிறது திராவிட முன்னேற்றக் கழகம். இன்றுள்ள இந்தியத் துணைக்கண்டத்தின் சமுதாய அமைப்பிலே இருக்கிற— சன்மார்க்க சீலர் அண்ணல் காந்தியின் பெயரைச் சொல்லிக்கொண்டு ஆட்சிப் பீடத்திலே அமர்ந்துள்ளோரின் நிர்வாக முறைகளிலேயுள்ள நாட்டின் ஒருபக்கம் சோலைவனம்! மறுபக்கம் பாலைவனம்! ஒரு பகுதியில் ஆலை அரசர்கள்! மறுபகுதியில் அன்றாடக் கூலிகள்! ஒரு பகுதியினர் அறுசுவை உணவுகொண்டு அஞ்சடுக்கு மாளிகையில் ஆனந்த வாழ்வில்! மறுபகுதியினர் அறைவயிற்றுக் கஞ்சிக்கும் வழியற்றுத் தெருத் தெருவாய் அலைந்திடும் திக்கற்ற நிலையில்! ஒருபுறத்தில் ஆணும் பெண்ணுமாகக் கூடி 'அன்பே! இன்பமே!' என ஆடிக்களித்திடும் ஆனந்த கீதம்! மறுபுறத்தில் பெற்றெடுத்த பிள்ளையையே அங்கவீனப்படுத்திப் பிச்சையெடுத்திடும் பெரு வேதனைக் காட்சி! என்ற இந்த இழிநிலைகள் வெட்டி வீழ்த்தப்பட்டு ஒப்புயர்வற்றதொரு சமதர்ம சமுதாயத்தை உருவாக்க வேண்டுமானால்—சமுதாயத்தின் சவங்களாகக் கிடக்கும் சகோதரர்கள் கஞ்சிக்கும் கெஞ்சும் பஞ்சநிலை பறந்து கொஞ்சும் நன்செய்யும் புன்செய்யும் கொண்ட ஆனந்தப் புதுவாழ்வு அடைந்திட வேண்டுமானால்—தொல்லையின் எல்லையிலே வாட்டும் வறுமை முள் தொட்டிலிலே ஊஞ்சலாட்டப் படுவோர் கரங்களிலே பூட்டப் பட்டுள்ள கொல்லும் இல்லாமை என்ற விலங்கு உடைத்தெறியப் பட்டு இன்ப வாழ்வுக்கான எல்லாம் கொண்ட இனிய புது வாழ்வு எய்த வேண்டுமானால்— "திராவிடநாடு திராவிடர்க்கே!" ஆகவேண்டும் என்கிறோம்.

இறந்த பன்னிரண்டாண்டுக்கால ஏக இந்திய இணைப்பிலே எந்த அளவுக்கு வடநாட்டால் தென்னாட்டு வளம் சுரண்டப்படுகிறது; எல்லாத் துறைகளிலும் எப்படியெல்லாம் வடநாட்டவரால் தென்னாட்டவர் வஞ்சிக்கப்பட்டு வருகின்றனர் என்பதற்கான ஆதாரங்களை அடுக்கிக் காட்டி, அடுத்தவர் மறுக்கமுடியாத புள்ளி விவரங்களையெல்லாம் அள்ளிச்சொல்லி இன்றைய அகில இந்திய அமைப்பிலே 'வடக்கு வாழவும் தெற்குத் தேயவுமான நிலையைத் தெளிவுப் படுத்தி வருகிறோம்.

எனவே, ஏக இந்திய இணைப்பிலேதான் இன்ப வாழ்விற்கான எல்லாம் கண்டும் கொண்டும் இன்புற்று நாம் வாழமுடியும் என எண்ணி எதிர்பார்த்த எல்லாவற்றிலும் ஏமாற்றமே கண்டு வருகிற — எதற்கெடுத்தாலும் வடநாட்டிற்கே ஓடவேண்டியுள்ள உரிமையற்ற வாழ்வினை உணர்ந்து வருகிற அகில இந்திய அரசியல்வாதிகளே! இனியாவது நீங்கள் இனப்பற்றும், ஏற்ற மொழிப்பற்றும் கொள்வீர்களா? உரிமை உணர்வும் உயர்தன்மான உணர்ச்சியும் பெறுவீர்களா? ஏக இந்திய இணைப்பிலே 'வடக்கு வாழ்கிறது; தெற்குத் தேய்கிறது' என்பதிலேயுள்ள உயரிய அரசியல் உண்மையையும், இந்நிலை நீங்குவதற்கேற்ற ஒரே ஒரு வழி "திராவிடநாடு திராவிடர்க்கே!" ஆவதுதான் என்பதிலேயுள்ள ஒப்பற்ற அரசியல் தத்துவத்தையும் கட்சியைக் கடந்து சிந்தித்துப் பார்ப்பீர்களா? கடமையை உணர்ந்து செய்ய வேண்டியவற்றைச் செய்வீர்களா?

நாடு கேட்கிறது இப்படி. ஆம்! நாடோறும் நல் வலிவும் பொலிவும் பெற்று வளர்ந்து வரும் கழகம் கேட்கிறது.

★

4-ம் பக்கத் தொடர்ச்சி

யும் தரவில்லை. நான் என்ன மறந்துவிட்டேனா? இல்லை இல்லை! இப்படி ரூபாய் நோட்டாகத் தருபவர்களுக்கு டிக்கட்டும் தராமல் சில்லறையும் தராமல் ஏமாற்றித்தானே இன்று 500 ரூபாய் வரையில் மல்லிகாவின் கல்யாணத்திற்கு என்றுசேர்த்துவைத்திருக்கிறேன். பஸ் திடீரென நின்றது. எங்கள் பஸ் முதலாளியின் மகன் பஸ்ஸில் ஏறிப் பரிசோதனை செய்தார். யாரிடமாவது டிக்கட் இல்லாமல் இருக்கிறதா என்று கேட்டார். அந்த இளைஞர் உடனே, "என்னிடம் இல்லை. நான் இங்கே ஓட்டப் பிள்ளையார் கோயில் நிறுத்தத்தில்தான் ஏறினேன்!'' என்று ஓரணாவை எடுத்துக்கொடுத்து டிக்கட் கேட்டார். நானும் ஒன்றும் பேசாமல் அவருக்கு டிக்கட்டைக் கிழித்துக் கொடுத்தேன். பஸ் முதலாளியின் மகன் இறங்கிப் போய்விட்டார். பஸ் காட்பாடியை அடைந்து கடைசி நிறுத்தத்தில் நின்றது. அந்த இளைஞர் அங்கேதான் இறங்கினார். நான் அவருடைய கையைப்பற்றி, மிக்க நன்றியுணர்வோடு, 'என்னை மன்னித்து விடுங்கள், இன்று என் வேலையே போயிருக்கும். நல்ல மனத்தோடு என்னைக் காப்பாற்றி விட்டீர்கள்,'' என்று சொல்லிக்கொண்டே அவரிடம் இரண்டு ரூபாய் நோட்டைத் திருப்பிக் கொடுத்தேன். ஆனால் அவரோ அதைத் திருப்பிப் பெறாமல், "உங்களுக்கு தேவைப்பட்டுத்தானே இதை எடுத்துக்கொள்ளப் பார்த்தீர்கள். எடுத்துக் கொள்ளுங்கள்,'' என்று கூறி, நான் என்ன சொல்லியும் வாங்காமலே போய்விட்டார். இந்த இரண்டு ரூபாயோடு சரி, இனி அந்த வழிக்கே போகமாட்டேன். இதுவரை சேர்ந்திருக்கும் 500 ரூபாயை வைத்துக்கொண்டு மல்லிகா,பள்ளியில் சேர்ந்து பத்தாம் வகுப்பை முடித்துவிடட்டும். முடித்துவிட்டு ஆசிரியப் பயிற்சியில் சேர்ந்துவிடட்டும். திருமணத்தைப்பற்றிப் பிறகு பார்த்துக்கொள்ளலாம்.''

அண்ணா சொல்லி முடித்ததும் என்னுடைய கண்கள் நீரைச் சொரிந்தன. அண்ணாவும் என்னைப் பார்த்துக் கண்ணீர் விட்டார். எனக்காகத்தானே அண்ணா இப்படித் தவறான வழியில் செல்ல நேர்ந்தது என்று எண்ணி வருந்தினேன். அந்த வருத்தத்தோடு கூடவே வேல்மணியைப் பற்றிய நினைவும் வரவேண்டுமா?

நானும் வேல்மணியும் ஐந்தாம் வகுப்பிலே படித்துக்கொண்டிருந்தோம், ஒருமுறை அவருடைய பென்சில் காணாமற் போய்விட்டது. இரண்டு மூன்று வாரங்களுக்குப் பிறகு ஒரு பையனிடம் வேல்மணியின் பென்சில் இருக்கப் பார்த்து, வேறு சில மாணவர்கள் அவனைப் பிடித்து அந்தப்பென்சில் யாருடையது என்று அதட்டிக் கேட்டனர். உடனே அந்தப் பையன் வேல்மணியினுடையதுதான் என்று ஒப்புக்கொண்டான், ஆனால் வேல்மணி வந்ததும் செய்தி அறிந்து, "பென்சில் என்னுடையதல்ல. அந்தப் பையனுடையதே'' என்று சொல்லிவிட்டார். பள்ளிக்கூடம் விட்டதும் அந்தப்பையன் தனியே வேல்மணியிடம் போய் பென்சிலைத் திருப்பிக்கொடுத்து, தன்னை மன்னிக்கும்படி வேண்டினான். வேல்மணியோ, "உனக்கு வேண்டுமென்று தானே எடுத்துக்கொண்டாய்! நீயே வைத்துக்கொள்; நான் வேறு ஒன்று வாங்கிக்கொண்டேன்.'' என்று சொல்லிவிட்டார். அவர் சொன்ன அந்தச் சொற்கள் இன்றுகூட என் காதில் ஒலிப்பது போல் இருக்கிறதே!

வேல்மணியோடு நான் ஆறாம் வகுப்பில் பேசியதுதான், அதற்குப்பிறகு ஒரு நாள் கூடப் பேசியதேயில்லை ஆறாம் வகுப்புக்கு மேல், மாணவர்கள் மாணவிகளோடு பேசுகின்ற பழக்கம்தான் எங்கள் பள்ளிக்கூடத்தில் இல்லையே!

வகுப்பிலே எப்போதும் முதல் எண் வாங்குகின்றவர்கள் நாங்கள் இருவரும்தான். எந்தப் பாடமாயினும் சரி. முதல் எண் என்றால் ஒன்று அவர் வாங்கி இருப்பார். இல்லை, நான் வாங்கியிருப்பேன். வேறு ஒரு மாணவர் முதல் எண் வாங்க நாங்கள் விடவேமாட்டோம். விட்டதும் இல்லை. நாங்கள் என்ன பேசிக்கொண்டா அப்படிச் செய்தோம்? இல்லவே இல்லை......

"மல்லிகா! மணி நான்கு ஆகப் போகிறதே! இன்னும் என்ன செய்கிறாய்? முகத்தை அலம்பிக்கொண்டு அந்தப் புடவையை உடுத்திக்கொள்வதுதானே!'' — அம்மாவின் குரல் கேட்கிறதே! ஐயோ! மணி நான்கு ஆகிவிட்டதா? இன்னும் ஒரு முடிவும் செய்யவில்லையே! என்ன முடிவைச் செய்வது? 'அவர்' என்ன குறையுடையவரோ? வரட்டும்— பார்த்துவிட்டே முடிவுசெய்வோம்.

இந்த அலங்காரங்கள் எல்லாம் எனக்குப் பிடிப்பதில்லைதான். என்ன செய்வது? அம்மாவுக்காகவும் அண்ணிக்காகவும் செய்துகொள்ள வேண்டியிருக்கிறது!

அண்ணாவோடு, அறையில் யாரோ பேசும் குரல் கேட்கிறதே! 'அவர்' வந்துவிட்டாரா?

ஏன் இப்படி மனம் நடுங்குகிறதோ? அவரைப்போய்ப் பார்க்க மாட்டேன் என்று சொல்லிவிடலாமா? முன்னமே இதை அண்ணாவிடம் சொல்லியிருக்கவேண்டும். அம்மாவிடமோ அண்ணியிடமோ இப்போது சொல்வதில் பயன் இல்லையே! பழமும் காப்பியும் இந்தத் தட்டில் வைத்து எடுத்துப் போய்க்கொடுத்துத்தான் அவரைப் பார்க்கவேண்டுமோ? இதுவும் ஒரு நல்ல ஏற்பாடுதான்!

இது என்ன? அறையில் நுழைகின்றபோதே உடல் இப்படி நடுங்குகிறதே! கண்கள் தரையைப் பார்க்கின்றனவே, இந்தத் தட்டை மேசைமீது வைத்துவிட்டு உடனே திரும்பிவிட வேண்டியதுதான். நம்மால் அங்கே நிற்கவும் முடியாது: அவரைப் பார்க்கவும் முடியாது.

"இவள்தான்! என் தங்கை மல்லிகா!'' தட்டை மேசைமீதுவைக்கு முன்னமே அண்ணா நம்மை அறிமுகம் செய்து வைக்கிறாரே!

"மல்லிகா! இவர்தான்''! தவறான வழியில் சென்றுகொண்டிருந்த என்னைத் திருத்திய இளைஞர்!'' யாராக இருந்தால் என்ன? தட்டை மேசைமீது வைக்கு முன்பேயா இப்படி அறிமுகம் செய்து வைப்பது? என்ன அண்ணாவோ?

"தூக்கக் கலக்கமோ?''— அண்ணாதான் அவசரப்படுகிறார் என்றால், அவருமா இப்படிச் சொல்லிச் சிரிக்கவேண்டும்! குரல், இதற்குமுன் எப்போதோ கேட்டதுபோல் இருக்கிறதே! தட்டை மேசைமீது வைக்கையில் கொஞ்சம் கண்களை உயர்த்தித்தான் அவரைப் பார்த்துவிடுவோம்! என்ன குறை அவரிடம் என்றுதான் தெரிந்துகொள்வோமே!

ஆ! அவரேதான்! என்னுடன் படித்துக்கொண்டிருந்த வேல்மணியேதான்! அதற்குள் என்னுடைய பேதைமனம் என்னவெல்லாமோ எண்ணிவிட்டது! இவரிடம் என்ன குறை இருக்குமோ என்று எண்ணிற்றே! என்ன குறையை இவரிடம் காணமுடியும்? நம்மிடம காதல்கொண்டுவிட்ட ஒன்றைத் தவிர!

★ சென்னை மாவட்ட ★

தி. மு. க. மாநாட்டுத் தீர்மானங்களில் சி

காங்கிரசு ஆட்சியின் அலட்சியப் போக்கு!

தென்னாட்டில்—குறிப்பாகத் தமிழ் நாட்டில் உணவுப் பொருள்களின் விலை நாளும் வேகமாக அதிகரித்து வருவதோடு, போதுமான உணவுப் பொருள் கிடைக்காமல் பெரும் பற்றாக்குறையும் ஏற்பட்டிருப்பதால், ஏழை—எளிய நடுத்தர மக்கள் கொடுமைகளுக்கு ஆளாகித் தவிப்பதால் ஜீவாதாரமான இந்த உணவுப் பிரச்சினையில் தக்க காலத்தில் உற்ற நடவடிக்கை எடுக்காமல் மாநில—மத்திய காங்கிரசு ஆட்சியினர் காட்டிய அலட்சியப் போக்கே இந்தக் கொடுமைக்குக் காரணமாகும் என்பதால் அவர்களது போக்கினை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

இனியும் உணவுப் பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்த மாநில—மத்திய அரசுகள் தவறுமானல், அவர்களின் இப்போக்கை வன்மையாகக் கண்டிக்கும் வகையில் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று பொதுச் செயலாளர் அவர்களை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

*

தனிப்பட்டோருக்குக் 'கண்டிராக்ட்' ஏன்?

இந்திய இராணுவத்திற்கு உடைகள் தயாரிப்பதற்காக ஜாம்ஷெட்பூரில் நிறுவப்பட்டுள்ள 'இராணுவ உடை தயாரிக்கும் நிலையம்' இந்திய இராணுவத்திற்குப் போதிய உடைகளைத் தயாரிக்க இயலாமல், மேற்கொண்டு தேவைப்படும் உடைகளைத் தயாரிக்க தனிப்பட்டோருக்கு 'கண்டிராக்ட்' விடுவதை இம்மாநாடு மிகவும் வன்மையாகக் கண்டிப்பதுடன், சென்னையிலேயே இராணுவ உடை தயாரிக்கும் நிலையத்தை அமைக்குமாறு மாநில அரசினரையும், டெல்லி ஆட்சியாளரையும் இம்மாநாடு வற்புறுத்துகிறது.

*

நகராட்சியின் ஆக்கப்பணிக்குப் பாராட்டு

சென்னை மாநகராட்சி மன்றம் அண்மையில் தொழில் வரி நீக்கம், தொழிலாளர்களுக்கு பிராவிடண்ட் நிதி, ஏழை மாணவர்களுக்குப் பகல் உணவு போன்ற நல்ல பல திட்டங்களை உருவாக்கி வருவதைக்கண்டு இம்மாநாடு மகிழ்ச்சியில் ஈடுபட்டுள்ள மாநகராட்சி மன்றத் தலைவரையும், உறுப்பினர்களையும் இம்மாநாடு மனமாரப் பாராட்டுகின்றது.

(அ) சென்னை மாநகராட்சி மன்றத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள், உருவாக்கப்படும் திட்டங்கள் ஆகியவைகளுக்கேற்ப அரசியலார் சுணக்கமின்றி அவ்வப்போது ஒத்துழைப்பும் நிதி உதவியும் அளிக்க வேண்டுமென்று இம்மாநாடு கேட்டுக்கொள்கின்றது.

(ஆ) சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்ட கழகத் தோழர்களுக்குப் பேராதரவு தந்த வாக்காளர்களையும், பொது மக்களையும் இம்மாநாடு மனமாரப் பாராட்டுகின்றது.

*

தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதி

சென்னை — கோடம்பாக்கம், அதனை அடுத்த விருகம்பாக்கம் எல்லைக்குள் உள்ள 'டெடிங் கெமிகல் பாக்டரி' 'ராலி சோப் பாக்டரி' 'கோல்டன்ஸ்டுடியோ' 'பாரமவுண்ட் ஸ்டுடியோ', 'சியாமளா ஸ்டுடியோ', 'பிலிம்செண்டர்', 'பரணிஸ்டுடியோ' 'பிரகாஷ் ஸ்டுடியோ', 'அருணாசலம்
ஸ்டுடியோ', 'ஏ. வி. எம். ஸ்டுடியே
'வாகினி ஸ்டுடியோ', 'விக்ரம் ஸ்
டியோ', 'விஜயா ஸ்டுடியோ', '
சாத் பிராசஸ்', 'சந்தமாமா பிரஸ்
'சின்ன லேபரடரி' இன்னும் ப
தொழில் அலுவலகங்களில் பண
யாற்றும் ஐயாயிரத்திற்கு மே
பட்ட தொழிலாளர்கள் 'எம்ப
யிஸ் ஸ்டேட் இன்ஷ்யூரன்சு தி
ட'த்தின்கீழ் வந்த பின்னர், நோ
வாய்ப்பட்ட தொழிலாளர்களுக்
வேண்டிய மருந்துகள் நடமாடு
மருத்துவ வண்டிகள் மூலம் தி
மும் மாலை 4-45-முதல் 5-15-வ
வழங்கப்பட்டு வருகிறது. இ
இன்னும் விரிவான முறையி
அத்தொழிலாளர்களுக்கும், அவ
களின் குடும்பங்களுக்கும் பயன்ப
கோடம்பாக்கத்திலேயே நிரந்தர
கட்டிடம் அமைத்து மருத்து
வசதி செய்ய அரசாங்கம் முன்வ
வேண்டுமென்று இம்மாநாடு வ
புறுத்துகிறது.

*

விஞ்ஞான முறையில் மீனவருக்கு வசதி

கடல் அரிப்பால் பாதிக்கப்பட்
வரும் வடசென்னை கடலோர
பகுதியில் பாதுகாப்புச் சுவ
அமைக்க வேண்டுமென்
சென்னை மாநகராட்சி மன்றத்தி
நிறைவேற்றப்பட்டுள்ள திட்ட
உடனடியாகச் செயல்முறைக்
வர அரசியலார் எல்லாவிதமா
ஒத்துழைப்புகளையும் காலங்கட
தாது தரவேண்டுமென்று இ
மாநாடு வற்புறுத்துகிறது.

(அ) மீனவர்களுக்கு விஞ்ஞா
முறையில் தொழில் செய்வதற்
ஏற்ற வசதிகளை இதுவரை அரசி
லார் சரியான முறையில் போது
மான அளவு செய்துதராமலிரு
பது குறித்து மிகவும் வருந்து
துடன், உடன் தக்க நடவடிக்கை
எடுத்துச் செயல்படுத்துமாறு
இம்மாநாடு வற்புறுத்துகிறது.

*